# வரலாறு

(புதிய பாடத்திட்டம்)

ஆண்டு

6

ந. தர்மபாலன், *B. A. Hons. (Cey.)*
(சமூகக்கல்வி சேவைக்கால ஆலோசகர்)

புருஷோத் வெளியீடு
31, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

(புதிய பாடத்திட்டம்)

1989 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள
புதியபாடத் திட்டத்திற்கமைய
எழுதப்பட்டுள்ளது.

## ஆண்டு

# 6

ஆனந்த்ஸ்
புத்தக நிலையம்
21/B, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

**ந. தர்மபாலன்** B. A. Hons. (Cey.)
(சமூகக்கல்வி சேவைக்கால ஆலோசகர்)

புருஷோத் வெளியீடு
*31, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு 1990, சித்திரை

# பொருளடக்கம்


| இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | உலகின் புராதன நதிக்கரை நாகரிகங்கள் | 3 |
| 2. | இந்து நதிக்கரை நாகரிகம் | 4 |
| 3. | குவாங்ஹோ நதிக்கரை நாகரிகம் | 6 |
| 4. | யூபிரதீஸ் தைகிறிஸ் நதிக்கரை நாகரிகம் | 8 |
| 5. | நைல் நதிக்கரை நாகரிகம் | 10 |
| 6. | நாகரிகங்கள் நதிக்கரைகளில் ஏற்படுவதற்கான காரணங்கள் | 12 |
| 7. | உலகின் முதல் நாகரிகங்களின் அடிப்படைப் பண்புகள் | 13 |
| 8. | இலங்கையின் பூர்வீகக் குடிகள் | 20 |
| 9. | இலங்கைக்கு ஆரியர் வருகை | 25 |
| 10. | பண்டுகாபய மன்னன் | 27 |
| 11. | இலங்கைக்கு பௌத்தசமயத்தின் வருகை | 28 |
| 12. | துட்டகைமுனு மன்னன் | 32 |
| 13. | வாலகம்பாகு மன்னன் | 33 |
| 14. | மகாசேனன் மன்னன் | 34 |
| 15. | தாதுசேன மன்னன் | 34 |
| 16. | காசியப்ப மன்னன் | 35 |
| 17. | அநுராதபுரகால விவசாயமும், வர்த்தகமும் | 36 |
| 18. | தென்இந்தியச் செல்வாக்கு | 38 |
| 19. | அநுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சி | 40 |


(பதிப்புரிமை வெளியீட்டு வாரியத்திற்கு)

விலை: ரூபா 12-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின்

# புராதன நதிக்கரை நாகரிகங்கள்

## நாகரிகத்தின் பிறப்பிடங்கள்

ஆதி மனிதன் நாடோடியாக வேட்டையாடித் திரிந்த காலத்தில் அவன் ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்கி வசிக்கவில்லை. வேட்டையாடும் பொருட்டு மிருகங்கள் வாழும் இடங்களை தேடித்திரிந்தான். தன்னுடைய பசியைப் போக்குவதற்காக வேட்டையின் மூலம் உணவு கிடைக்குமோ என்ற ஏக்கத்துடனேயே வாழ்ந்தான். வேட்டையின் மூலம் உணவு கிடைக்காத சந்தர்ப்பங்களில் அவன் பட்டினியால் வாடினன். ஒரே இடத்தில் தனக்குத் தேவையான உணவு கிடைக்குமோ என்ற சந்தேகம் அவனிடம் எப்பொழுதும் நிலவியது. இதனல் அவனுக்கு நிரந்தரமாக ஓரிடத்தில் வாழ்வது பற்றிச் சிந்திக்க முடியவில்லை. மிருகங்களை வேட்டையாடுவதற்காக நாடோடியாக இடத்துக்கிடம் அலையவேண்டியதாயிற்று. அன்ருட உணவுக்காக அலைய வேண்டியிருந்ததால் பயிர்ச்செய்கை பற்றிச் சிந்திப்பதற்கு அவனுக்கு அவசியம் ஏற்படவில்லை.


இவ்வாறு நிலையற்ற வாழ்க்கை நடாத்தி வந்த ஆதிமனிதன் காலப்போக்கில் ஓரிடத்தில் தங்கிவாழப் பழகிக்கொண்டான். அவன் நாடோடியாக அலைந்து திரிந்ததால் அவனுக்கு ஓய்வு அவசியமாயிற்று. மிருகங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதும் அவசியமாயிற்று. இதன் விளைவாக அவன் நிரந்தர குடியிருப்பொன்றை அமைக்க முற்பட்டான். இந்த நிலையில் புதிய கற்கால (நியோலிதிக்காலம்) மனிதன் குறிப்பிடத்தக்கவனுவான். இவன் வேட்டையாடியதுடன் கால் நடைகளை (மந்தை) வளர்த்தும், தானியங்களைப் பயிர்செய்தும் வாழப் பழகிக் கொண்டான். உடைகளை அணியவும், குடிசைகளை அமைக்கவும் பழகிக்கொண்டான். நெருப்பைக் கண்டு பிடித்தான். நெருப்பினுதவியுடன் உணவுப் பொருட்களை சமைத்து உண்ணப் பழகிக்கொண்டான். இவ்வாறு வாழப் பழகிக்கொண்டவன் உணவை உறுதியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வழியைத் தேடினன். விவசாய நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்பள்ளத்தாக்குகள் உகந்ததென்பதை உணர்ந்தான். இதன் விளைவாகவே தனது குடியேற்றங்களை ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் அமைத்துக்கொண்டான். நீர், வளமான மண், காலநிலை போன்றவற்றை ஆதிமனிதன் மனதில் கொண்டதால் ஆற்றுப்பள்ளத்தாக்குகள் ஆதிமனிதனின் இருப்பிடங்களாக மாறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் குடியேறி விவசாயத்திலீடுபட்ட இவர்களுக்கு வேறு தேவைகள் பற்றியும் சிந்திக்க அவகாசம் கிடைத்தது. இதனுல் வீடமைத்தல், நிர்வாகம், சமயம், கலை, வைத்தியம், போக்குவரத்து, கருத்துப்பரிமாற்றம் போன்ற துறைகளிலும் ஆர்வம் காட்டினர். இத்தகைய பல்வேறு துறைகளில் இவர்களுக்கு ஏற்பட்ட ஆர்வத்தின் விளைவே நதிக்கரை நாகரிகங்களின் தோற்றமாகும். இவ்வாறு வளர்ந்த நதிக்கரை நாகரிகங்களை நான்காகக் கண்டுள்ளனர். அவையாவன;

(1) இந்து நதிக்கரை நாகரிகம்
(2) குவாங்ஹோ நதிக்கரை நாகரிகம்
(3) யூபிரதீஸ் - தைகிறிஸ் நதிக்கரை நாகரிகம்
(4) நைல் நதிக்கரை நாகரிகம்




நாகரிகத்தின் பிறப்பிடங்கள்

(படம் 1)

## இந்து நதிக்கரை நாகரிகம்


இந்தியத்துணைக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் ஓடும் நதியே இந்துநதியாகும். இன்று இந்துநதிப்பகுதி பாக்கிஸ்தானுக்குரியது. இமாலய மலைத்தொடரில் உற்பத்தியாகும் ரவி, ஜீலம், சேனப், பியஸ், சட்லெஜ் ஆகிய ஐந்து கிளை நதிகளும் இணைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததே இந்துநதியாகும். இந்நதி பாக்கிஸ்தானின் கராச்சி நகருக்கண்மையில் அராபியக்கடலில் விழுகின்றது. இந்நதிப் பள்ளத்தாக்கில் ஆதிமக்கள் குடியேறியிருந்தனர். இந்நதிக்கரைப் பிரதேசத்தில், மிகப்புராதன காலந்தொடக்கம் மக்கள் வாழ்ந்து வந்தமைபற்றி சமீபகாலம் வரை ஒருவரும் அறிந்திருக்கவில்லை.

கி. பி. 1921 இல் தயாராம் ஷினி என்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் பஞ்சாபில் ரவி நதிக்கண்மையில் ஹரப்பா நகரத்தின் சிதைவுகளைக் கண்டு பிடித்தார். கி. பி. 1922 இல் ஆர். டி. பனர்ஜி என்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் இந்து நதியின் கீழ்ப்பகுதியிலுள்ள சிந் பிரதேசத்தில் மொஹெஞ்ஜதாரோ நகரின் சிதைவுகளைக் கண்டுபிடித்தார்.




இந்து நதிப் பள்ளத்தாக்கு


(படம் 2)

இத்தோடு இந்துநதி நாகரிகத்துடன் தொடர்புடைய வேறு 70 இடங்களையும் வேறு புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இவற்றுள் சில இந்துநதியின் மேற்குப்பகுதியிலும், சில கங்கை நதியின் மேற்குப் பகுதியிலும், சில நர்மதா நதியின் ஆற்று முகப்புப்பகுதியிலும், சில குஜராத்திலும் காணப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து இம்மக்கள் இந்துநதிப் பள்ளத்தாக்கிலும், இந்தியாவின் ஏனைய பிரதேசங்களிலும் பரந்து வாழ்ந்துள்ளமை தெளிவாகின்றது. மொஹெஞ்ஜதாரோ, ஹரப்பா நகரங்களின் அமைப்பில் ஒரு வகை ஒருமைப்பாடு காணப்படுகின்றது. இவ்விரு நகரங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்த மதிற்சுவர்களுக்குள் உள்நகரங்கள் அமைந்திருந்தன. பிரதான கட்டிடங்களும் உள் நகரத்திலேயே அமைந்திருந்தன. மதிற் சுவர்களுக்கப்பால் அமைந்த வெளிநகரில் சாதாரண குடிமக்கள் வாழ்ந்தனர். மதில்களும், கட்டிடங்களும் ஒரே வகைக் கற்களினுல் கட்டப்பட்டிருந்தன. சில கட்டிடங்களும், மதில்களும் உலர்ந்த செங்கற்களினுல் கட்டப்பட்டிருந்தன. பெரும்பாலான கட்டிடங்களும், மதில்களும் சுட்ட செங்கற்களினுலும் கட்டப்பட்டிருந்தன. சில புதைபொருள் ஆய்வாளர்கள் இவ்விருநகரங்களும் ஒரே இராச்சியத்தின் வட,தென்பகுதிகளில் அமைந்திருந்த பிரதான நகரங்களென்று கருதுகின்றுர்கள். இங்கு கண்டெடுக்கப்பட்ட சிதைவுகளிடையே களிமண்ணினுல் செய்யப்பட்ட விளையாட்டு வண்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.




(படம் 3)


## குவாங்ஹோ நதிக்கரை நாகரிகம்

சீனுவில் காணப்படும் நீளமானதும், விசாலமானதுமான நதியே குவாங்ஹோ நதியாகும். இந்நதி சீனுவிலுள்ள மலைப்பிரதேசங்களில் உற்பத்தியாகி சீனக்கடலில் விழுகின்றது. வடசீனுவிலிருந்து காற்றினுல் அள்ளுப்பட்டுவரும் மென்மையான மண் இந்நதியில் சேர்க்கப்படுவதாலும், வெள்ளப்பெருக்கினுல் நதியின் அயல் பிரதேசங்களில் இம்மென்மையான மஞ்சள் நிற மண் படிவதனுலும் குவாங்ஹோ நதி மஞ்சள் ஆறு என்ற காரணப்பெயரையும் பெற்றுள்ளது. மலைப்பிரதேசங்களிலிருந்து நீரரிப்பினுல் கொண்டுவரப்படும் மண் ஆற்றுப்படுக்கைகளில் படிவதால் இந்நதியில் எப்பொழுதும் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நதிக் கரைகளில் குடியேறிய ஆதிவாசிகள் கிராமங்களில் வாழ்ந்தனர். காலப்போக்கில் சிறிய, சிறிய இராச்சியங்கள் தோன்றின. இவ்விராச்சியங்களை கி. மு. 1750 ஆம் ஆண்டளவில் ஷான் அரசவம்சத்தினர் ஐக்கியப்படுத்தினர். ஷான் அரசவம்சத்தினரின் கீழ் சீரான வாழ்க்கை நடாத்திய மக்கள் வரிகளைக் கொடுக்கவும் படைகளை திரட்டவும், வேலையாட்களை வைத்திருக்கவும் பழகிக் கொண்டனர். ஷான் வம்சத்து மன்னர்கள் போர் செய்து தமது அதிகாரத்தை நிலைநாட்டவும் பழகிக்கொண்டனர். அன்யான் பிரதான நகரமாக விளங்கியது. சீன நாகரிகத்தைப்பற்றிய தகவல்கள் அன்யானில் கண்டெடுக்கப்பட்ட சிதைவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. அன்யான் நகரம் கி. மு. 1300 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டதென நம்பப்படுகிறது.




ஹுவாங்ஹோ நதிப பள்ளத்தாக்கு


(படம் 4)

இங்கு நிர்வாகப்பொறுப்பு பிராந்தியப் பிரபுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரபுக்கள் போர்க்காலங்களில் மன்னர்க்கு உத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினர். இராச்சியத்தின் எல்லைகளைப் பாதுகாத்தனர். ஒவ்வொரு வருடமும் மன்னனுக்கு வரி செலுத்தினர். மன்னனுக்குத் தேவையான வேலையாட்களையும் கொடுத்து உதவினர். இவர்களோடு அரசகருமங்களில் மன்னருக்கு உதவ வேறு ஊழியர்களும் இருந்தனர். சீன மன்னர்கள் பலம் பொருந்தியவர்களாகக் காணப்பட்டனர். இதனால் இவர்களால் பெரியதொரு சாம்ராச்சியத்தையே அமைக்க முடிந்தது. வடக்கிலிருந்தும், வடமேற்கிலிருந்தும் படையெடுத்த பகைவரின் தாக்குதல்களைத் தடுப்பதற்காக ஷான்ஷி மன்னனின் படைத்தலைவனாகிய மோதியோ ஒரு பெரும் மதிலைக் கட்டினான். இது 2240 Km நீளமுடையது. இதுவே இன்று சீனப்பெருஞ் சுவராக மிளிர்கின்றது.



(படம் 5)

இந்நாகரிகத்தைப் பற்றிய தகவல்கள் எலும்புகளிலுள்ள குறிப்புக்களிலிருந்தும், ஆமை ஓடுகளில் எழுதப்பட்டிருந்த குறிப்புக்களிலிருந்தும், பட்டுத்துணி, மரப்பலகை, மூங்கில் ஆகியவற்றிலுள்ள குறிப்புக்களிலிருந்தும் சீன நாகரிகத்தைப் பற்றிய தகவல்களைப் பெறக்கூடியதாகவுள்ளது.

## யூபிரதீஸ் - தைகிறிஸ் நதிக்கரை நாகரிகம்


மெசபொத்தேமியாவின் வட பகுதியில் உற்பத்தியாகும் யூபிரதீஸ், தைகிறிஸ் ஆகிய இரு நதிகளும் பாரசீகக் குடாவில் விழுகின்றது. இற்றைக்கு ஏறக்குறைய 8000 ஆண்டுகளுக்கு முன்ன ஆதிமக்கள் இந்நதிகளின் கரையோரங்களில் குடியேறினர். இந்த இரு நதிகளுக்கிடையிலுள்ள பிரதேசம் மெசபொத்தேமியா என அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இந்நதிகளுக்கண்மையில் குடியேறிய ஆதிமக்களில் சுமேரியர் இங்கு குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் தம்மைப் பற்றிய பல்வேறு தகவல்களை ஆயிரக்கணக்கான சுட்ட களிமண் தட்டுகளில் எழுதி வைத்துள்ளனர்.

இவ்விரு நதிக்கரையோரங்களும் வெள்ளப் பெருக்குகளினால் வளமாக்கப்பட்டன. இங்கு விவசாயத்திலீடுபட்ட மக்கள் உயர்ந்த நாகரிகத்தை உருவாக்கிக் கொண்டனர். ஆரம்பத்தில் கிராமங் களில் வாழ்ந்து, பின்னர் நகரங்களை அமைத்துக் கொண்டனர். இங்கு தோன்றிய நகரங்களுள் ஊர், கிஷ், லகாஷ், நிபூர் பிரதான நகரங்களாகும்.




யூபிரதிஸ் தைகிறிஸ் நதிப் பள்ளத்தாக்கு

(படம் 6)

ஒவ்வொரு நகரமும் தனித்தனி அரசுகளாக அமைந்திருந்தது. பள்ளத்தாக்கின் மேற்பகுதி அக்காடி என்றும், கீழ்ப்பகுதி சுமர் என்றும் அழைக்கப்பட்டன. சுமேரியர் குடியேறிய கீழ் பகுதியில் நகர அரசுகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கின. அரசு ஒன் றின் நிர்வாகம் பிரதான புரோகிதருடைய பொறுப்பின் கீழிருந் தது. ஒவ்வொரு நகர அரசுக்கும் பிரதான தெய்வம் ஒன்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான புரோகிதர் தெய்வத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார். இவர் நிர்வாகி என்ற வகையில் மக்கள் தாம் செய்யவேண்டிய கருமங்கள் பற்றிய கட்டளைகளைப் பிறப்பிப்பார். இவருக்கு உதவியாக வேறு புரோகிதர்களும் இருந்தனர். இவர்கள் விவசாயிகளினதும், தொழிலாளர்களினதும், கருமங்கள் பற்றிய கட்டளைகளைப் பிறப்பித்தனர். விவசாயிகளும், தொழிலாளர்களும் புரோகிதர்களின் பராமரிப்புக்காக வரி செலுத்தினர். இவ்வரிகள் பண்டங்களாகச் செலுத்தப்பட்டுக் கோயில்களில் சேமித்து வைக்கப்பட்டன. புரோகிதர்கள் மக்களுக்கு உணவுப்பொருட்களையும், விதைகளையும் விநியோகித்தனர்.


நகர அரசுகளின் பிரதான ஆட்சி நிறுவனம் பிரதான கோயிலாகும். இக்கோயில்கள் சிகுராக் என அழைக்கப்பட்டன. பிரதான புரோகிதர் சிகுராக்கில் குடியிருந்தார். ஊர் என்ற பெரிய நகரம் யூபிரதீஸ் நதியின் ஆற்று முகத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது. வர்த்தக நோக்கில் பிறநாடுகளுக்கு சென்றுவரும் வியாபாரிகள் நிறைந்த துறைமுகமாகவும் இது திகழ்ந்தது. கி.மு 2350ஆம் ஆண்டளவில் சுமேரியருடைய இராச்சியம் அக்காடி மக்கள் வசமாயிற்று. பின்னர் கி. மு 1900 ஆண்டளவில் பபிலோனியர் இப்பிரதேசத்தைக் கைப்பற்றினர்.

## நைல் நதிக்கரை நாகரிகம்

விக்டோரியா ஏரியில் உற்பத்தியாகி எகிப்தினூடாகப் பாய்ந்து மத்திய தரைக்கடலில் சங்கமமாகும் நதியே நைல்நதியாகும். உலகிலேயே மிக நீண்ட நதியாகும். இதன் நீளம் 5760 Km. எகிப்து ஒரு பாலைவனப்பிரதேசமாகும். இப்பிரதேசத்தினூடாக இந்நதி பாய்வதனால் இதன் இரு மருங்கிலும் வளமான மண்ணைக்கொண்ட ஒடுங்கிய பள்ளத்தாக்கு உருவாகியுள்ளது. நைல்நதியின் முக்கிய கிளைகளில் ஒன்றாகிய புளூநைல் எதியோப்பியாவிலுள்ள மலைகளில் உற்பத்தியாகி நைல்நதியுடன் இணைகின்றது. வெள்ளப்பெருக்குகளினால் நதியின் இரு மருங்குகளிலும் வளமான மண் படிகின்றது. இதனால் இப்பகுதிகள் விவசாயத்திற்கு உகந்தனவாகின்றது. கி. மு 6000 ஆண்டுகளுக்கு முன் குடியிருப்பதற்கு உகந்த இடங்களைத் தேடி நாடோடிகளாக அலைந்த மக்கள் கூட்டம் நைல்நதிப் பள்ளத்தாக்கில் குடியேறினர். கிராமங்களை அமைத்தனர். காலப்போக்கில் தனித்தனியாக இருந்த கிராமங்கள் மாவட்டங்களாக ஒன்று சேர்க்கப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நயில் நதிப் பள்ளத்தாக்கு

(படம் 7)

கி. மு 3500 ஆண்டளவில் மேற்பகுதியிலுள்ள மாவட்டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டதால் மேல் எகிப்து என்ற இராச்சியமும், கீழ்ப் பகுதியிலுள்ள மாவட்டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டதால் கீழ் எகிப்து என்ற இராச்சியமும் தோன்றின. கி. மு 3000 ஆண்டள




(படம் 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் மெனெஸ் என்ற மன்னன் இவ்விரு இராச்சியங்களேயும் இணைத்தான். நைல்நதிக்கரையில் மெம்பிஸ் நகரை நிர்மாணித்தான். எகிப்திய மன்னர்கள் பேரோக்கள் என்றழைக்கப்பட்டனர். எகிப்திய மக்கள் போரோக்களே தெய்வமாக மதித்தனர். புராதன எகிப்திய மன்னர்கள் தாங்கள் இறந்தபின் தங்கள் சடலங்களே அடக்கம் செய்வதற்காக 'பிரமிட்' களைக் கட்டுவித்தனர். (படம் 8)

எகிப்தின் மிகப்பிரமாண்டமான பிரமிட் குபுபேரோவினுல் கட்டப்பட்டது. இது 13 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதன் உயரம் 145 மீற்றராகும். நூறுயிரம் தொழிலாளர்கள் 20 ஆண்டுகள் இதை அமைப்பதில் ஈடுபட்டார்கள்என்று கூறப்படுகின்றது. இது 5000 ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்தது. பிரமிட்கள் எகிப்திற்கே உரித்தான தனித்தன்மை வாய்ந்தவையாகும். பிரமிட்களுக்குள்ளே அமைந்த சுவர்களிலும், எகிப்தியக் கோயில்களிலும் எகிப்தியரைப் பற்றிய பல்வேறு தகவல்கள் எழுதப்பட்டுள்ளன. இத்துடன் பபிரஸ் ஏடுகளிலுள்ள குறிப்புக்களிலிருந்தும் தகவல்களைப் பெறக்கூடியதாகவுள்ளது.

## நாகரிகங்கள் நதிக்கரைகளில் ஏற்படுவதற்கான காரணங்கள்

(1) நீர்வசதி
(2) வளமான மண்
(3) பொருத்தமான காலநிலை
(4) போக்குவரத்து வசதி

பயிர்செய்யும் இடத்திற்கு அருகாமையிலோ அல்லது மூலப்பொருட்கள் இலகுவாகக் கிடைக்கும் இடத்திலோ அல்லது தொழில் செய்யும் இடத்திற்கு அருகாமையிலோ வசிப்பதற்கு ஒருவர் வசிப்பிடத்தை தெரிவுசெய்யலாம். ஆனல் அவ்விடம் நீர் வசதியற்றிருக்குமாயின் அப்பிரதேசம் நிரந்தர குடியிருப்பாக அமையாது போய்விடும். பயிர்ச்செய்கை மூலம் சீவனம் நடாத்தும் ஒருவர் சகல வசதிகளும் உள்ள ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்த போதிலும் அவ்விடத்திலுள்ள மண் வளமற்ற மண்ணுக இருந்தால் அவ்விடம் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்றதாகும். இதேபோல் வீடொன்றை அமைக்கும்போது நீரைத் தாராளமாகப் பெறக்கூடிய வசதியும், வாழ்வதற்கு உகந்த கால நிலையும், போக்குவரத்து வசதியும் இருத்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் நாகரிகங்களின் அடிப்படைப் பண்புகள்

## இந்துநதிக்கரை மக்களின் உணவு

இந்துநதிக்கரை மக்களின் பிரதான உணவு கோதுமையாகும். இவர்கள் வாற்கோதுமை, எள்ளு போன்ற தானியங்களையும் பயிர்செய்தனர். மொஹெஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் பெரிய தானியக் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதிலிருந்து தானியங்களைச் சேகரித்தல் முக்கிய இடம்பெற்றுள்ளமை புலனாகின்றது. இவர்கள் ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி, மீன், முட்டை, பால், பாலாடைக் கட்டி, நெய் ஆகியவற்றையும் உணவாக அருந்தினர். ஆடு, மாடு, எருமை, பன்றி, கழுதை, கோழி ஆகிய கால்நடைகளையும் வளர்த்தனர். வீடுகளில் நாய்களையும் வளர்த்தனர்.

## இந்துநதிக்கரை மக்களின் உடை

இந்து நதிக்கரை மக்கள் பருத்தியினாலான உடைகளையே அதிகமாக அணிந்தனர். பொதுவாக பருத்தியாடைகளையே அணிந்தபோதிலும், கம்பளி ஆடைகளையும் அணிந்துள்ளனர். இதற்காகப் பருத்திச் செடிகளை வளர்த்தனர். ஆண்களும், பெண்களும் பருத்தியிலான மென்மையான உடைகளை அணிந்தனர். பெண்கள் முழங்காலுக்குக்கீழ் நீண்டிருந்த பாவாடையைப் போன்றிருந்த ஆடையை அணிந்தனர். தொப்பிகளையும் அணிந்தனர். தங்கம், வெள்ளி, செம்பு, மாணிக்கக் கல், ஆகியவற்றைக் கொண்டு செய்த மாலை, காப்பு, காதணி, மூக்கணி, நெற்றிப்பட்டம், மோதிரம் ஆகிய அணிகளையும் அணிந்தனர்.

## இந்துநதிக்கரை மக்களின் கட்டிடக் கலை

உள்நகரில் பிரதான கட்டிடங்கள் இருந்தன. தானியக் களஞ்சியங்கள், நிர்வாக அலுவலகங்கள், கோயில்கள், மக்கள் கூடும் மண்டபங்கள், குளியல் அறைகள் போன்ற கட்டிடங்கள் யாவும் செங்கட்டிகளினாலான மேடைகள் மீது, செங்கட்டிகளினால் கட்டப்பட்டிருந்தன. வெளிநகரில் பிரதான தெருவின் இருமருங்கிலும் பெரிய வீடுகள் அமைந்திருந்தன. சிறு தெருக்களின் இருமருங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலும் சிறிய வீடுகள் கட்டப்பட்டிருந்தன. வீடுகள் யாவும் சுட்ட செங்கட்டிகளினுல் கட்டப்பட்டன. மாடி வீடுகளும் காணப் பட்டன. மேல்மாடிக்குச் செல்ல குறுகிய படிக்கட்டும் இருந்தது. வீட்டின் நடுமுற்றத்தின் ஒருபக்கத்தில் சமையலறை இருந்தது. வீட்டின் தரை களிமண்ணினுல் மெழுகப்பட்டிருந்தது. தரையில் கோரைப்பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. சுவர்களுக்கு பூச்சிடப் பட்டிருந்தன. பெரும்பாலான வீடுகளில் கிணறுகளும், குளியலறை களும் இருந்தன. வீடுகளிலிருந்து கழிவுநீர் குழாய்கள்மூலம் தெரு வின் இருபக்கங்களிலுமுள்ள சாக்கடைகளைச் சென்றடைய வழி செய்யப்பட்டிருந்தது. உள்நகரில் சிறந்தமுறையில் அமைக்கப் பட்ட பெரிய ஸ்நானப் பொய்கை ஒன்றிருந்தது. மொஹெஞ்சதாரோவில் பெரிய தூண்களையுடைய மண்டபம் மிகவும் அழகு வாய்ந்தது.

## இந்துநதிக்கரை நாகரிக மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும்

இந்துநதிக்கரை மக்கள் பெண்தெய்வத்தை வழிபட்டுள்ளனர். இப்பெண்தெய்வத்தின் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளிலும் பெண்களின் ரூபக்குறிப்புகள் காணப்படுகின்றன. அங்கு கண்டெடுக்கப்பட்ட இலச்சினையொன் றில் மிருகங்களால் சூழப்பட்ட மூன்று முகங்களுடைய ஆண் உருவம் ஒன்றும் காணப்படுகின்றது. இது இவர்கள் வணங்கிய ஆண்தெய்வத்தின் உருவமென நம்பப்படுகின்றது. இவற்ருேடு மிருகங்களையும், மரங்களையும் வழிபட்டுள்ளனர். இறந்தவர்களின் சாம்பல்களைப் பேணி வைக்கப்பட்டுள்ள பேழைகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இதிலிருந்து இவர்களுக்கு மறுபிறப்பில் நம்பிக்கை உண்டென்பது புலனுகின்றது.

இவர்களின் விளையாட்டுக்களில் பகடை ஆட்டம், பந்தாட்டம், மல்யுத்தம் போன்றவை முக்கிய இடம்வகித்துள்ளன. சங்கீதம், நாடகங்களை மேடையேற்றல், ஆயுதப் பயிற்சிகள், மிருகங்களுக் கிடையில் போட்டிகள், காளைப்போட்டிகள் போன்றன இவர்களின் பொழுதுபோக்குகளாகக் காணப்பட்டுள்ளன.

## இந்துநதிக்கரை மக்களின் இலக்கியமும், கலைகளும்

இந்துநதிக்கரை மக்களில் குயவர்கள் வனைசில்லினுதவியுடன் மனங்கவர் மட்பாண்டங்களைச் செய்தனர். மிருதுவான மட்பாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுங்களைச் செய்து, கருஞ்சிவப்புநிற வர்ணந்திட்டி, அதன் மத்தியில் கறுப்புநிறத்தில் வேலைப்பாடுகளை அமைத்தனர். இவர்கள் வெண்கல, வெள்ளிப் பாத்திரங்களையும் உருவாக்கினர். வெண்கலத்திலும், களிமண்ணினாலும் உயிர்த்தன்மை வாய்ந்த அழகிய உருவச்சிலைகளைச் செய்தனர். மதகுரு ஒருவரின் உருவச்சிலையும், நடனமாதின் சிலையும் இவற்றுள் சிறந்தவையாக விளங்குகின்றன. இங்கு அநேக விளையாட்டுப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் களிமண்ணினாலான புல்லாங்குழலும், வண்டிலும், குருவிக்கூடும், மாட்டின் சிலையும் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளின் மூலம் இவர்கள் சிற்பக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது தெளிவாகின்றது. சங்கீதம், நாடகக்கலைகளில் ஆர்வமுடையவர்களாகவும் இருந்துள்ளனர்.

## குவாங்கோ நதிக்கரை மக்களின் உணவு

குவாங்கோ நதிக்கரை மக்கள் பயிர்ச்செய்கை செய்த அதே நேரத்தில் விலங்குகளையும் வளர்த்தனர். தானியங்களை விதைக்க முன் அவர்கள் கல்லினாலான கலப்பையினால் நிலத்தை பண்படுத்தினர். சிப்பி ஓட்டினால் செய்யப்பட்ட அரிவாள் மூலம் அறுவடை செய்தனர். இவற்றைத்தவிர கோடரி, கைக்கோடரி, கத்தி, உளி, அம்பு, ஈட்டி போன்ற உபகரணங்களும் உபயோகிக்கப்பட்டன. கிராமவாசிகள் அனைவரும் கமத்தொழிலில் ஈடுபட்டனர். விவசாயிகள் காலை முதல் மாலைவரை வயல்களிலும், தோட்டங்களிலும் உழைத்தனர். கால்நடைகளை வளர்த்தல், மீன் பிடித்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டனர். கோழிவளர்ப்பிலும் ஈடுபட்டனர். இவர்கள் பயிரிட்ட தானியங்களுள் தினை முக்கிய இடம் வகித்தது. இத்துடன் கோதுமை, வாற்கோதுமையும் பயிரிட்டனர். இவற்றிலிருந்து உணவுப்பண்டங்களைத் தயாரித்தனர். இவற்றோடு மரக்கறிவகை, மீன், இறைச்சி, பால், பாலாடைக்கட்டி, வெண்ணெய் ஆகியவற்றையும் அருந்தினர்.

## குவாங்ஹோ நதிக்கரை மக்களின் உடை

குவாங்ஹோ நதிக்கரை மக்கள் பட்டுத்துணியை நெய்து பட்டாடைகளை அணிந்தனர். பட்டுப்பூச்சியின் கூடுகளிலிருந்து பட்டுத்துணியை நெய்வதற்கான நூலைப் பெற்றனர். சீனாவில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளிலுள்ள குறிப்புகளிலிருந்து பட்டுப்பூச்சி பற்றியதும், பட்டாடைகள் பற்றியதுமான தகவல்களைப் பெறக்கூடியதாகவுள்ளது. இதுபோல் நூல் நூற்பதற்கு உபயோகிக்கப்பட்ட கருவிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குவாங்ஹோ நதிக்கரை மக்களின் கட்டிடக்கலை

இங்குள்ள கட்டிடங்கள் எல்லாம் ஒழுங்கான ஒரு திட்டத்திற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தன. சாதாரண மக்கள் நிலத்தை அகழ்ந்து நிலத்தின் கீழ் வீடுகளை அமைத்தனர். இவை நீள் சதுரமானவையாகவும், வட்டமான வடிவங்களையுடையவையாகவும் அமைந்திருந்தன. வீட்டின் நுழைவாயில் வட்டமாயிருந்தது. இறங்கி உள் செல்வதற்கு படிக்கட்டுக்கள் இருந்தன. வீட்டின் மத்தியில் பெரிய தூண் அமைக்கப்பட்டிருந்தது. செல்வந்தர்களின் வீடுகள் களிமண்மேடைகளில் மரத்திலாலாக்கப் பட்டிருந்தது. மூன்று வரிசைகளில் கட்டப்பட்ட தூண்களின் மீது இரண்டு பாகங்களைக் கொண்ட கூரை பொருத்தப்பட்டிருந்தது. பெரும்பாலான வீடுகளுக்கு சாம்பல்நிறக் களிமண் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## குவாங்ஹோ நதிக்கரை மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும்

புராதன சீனமக்கள் கல்லறைகளைக்கட்டி அவற்றில் இறந்தவர்களின் சடலங்களைப் பேணிவைத்தனர். அத்துடன் அவர்கள் உபயோகித்த பொருட்களையும் வைத்தனர். இதிலிருந்து இவர்களுக்கும் மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கை இருந்துள்ளமை புலனாகின்றது. இவர்கள் இறந்தவர்களையும் வணங்கினர் என நம்பப்படுகின்றது. பிற்காலத்தில் இவர்களிடையே சிறந்த தத்துவங்களும், மதக்கோட்பாடுகளும் தோன்றின. லாஒட்சே, கொன்பியுசியஸ் ஆகியோர் சிறந்த மதத்தத்துவங்களை பிறப்பித்தவர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

## குவாங்ஹோ நதிக்கரை மக்களின் இலக்கியமும், கலைகளும்

இந்நதிக்கரை மக்கள் சிறந்த இலக்கியங்களை எழுதினர். 'மாற்றங்கள்' என்ற பெயருடைய புத்தகத்தில் வசியங்கள், புராதன மந்திரங்கள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. 'சிஷ்சிங்' என்ற கவிதைநூல் இம்மக்களிடையே பிரபல்யமான ஒரு நூலாகும். இதில் நாட்டார் பாடல்கள், பக்திப்பாடல்கள், அரசவைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இம்மக்கள் அழகிய மட்பாண்டங்களைச் செய்தனர். இவர்கள் வெண்களி, சிவப்பு, கறுப்பு, கபிலநிறகளிமண் வகைகளைக் கொண்டும் மட்பாண்டங்களைச் செய்துள்ளனர். வர்ணங்களைத் தீட்டியும், வேலைப்பாடுகளை வரைந்தும் பொருட்களைக் கண்கவரக்கூடிய வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஆக்கினர். செம்பு, வெண்கலம், ஈயம், தங்கம் ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு பொருட்களையும், சிலைகளையும் செய்தனர். மரத்தினாலான குதிரைத்தேர் இவர்களது சிறந்த படைப்பாகக் கருதப்படுகின்றது. செதுக்கல் கலையிலும் இவர்கள் முன்னேறியிருந்தனர்.

## யூபிரதீஸ் - தைகிறிஸ் நதிக்கரை மக்களின் உணவு

இங்கு விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த மிகவும் பிரயாசையுடன் உழைத்தனர். கோதுமை, வாற்கோதுமை, பேரீந்து, மாதுளை, அப்ரிகொட், பீச், கொடி முந்திரி, அத்திப்பழம், வெங்காயம், வெள்ளைப்பூடு, சலாது ஆகியவற்றைப் பயிர் செய்தனர். மக்கள் நீர்ப்பாசன நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். துலாவினுதவியுடன் வயல்களுக்கும், தோட்டங்களுக்கும் நீரைப்பாய்ச்சினர். உழுவதற்கு மரக்கலப்பையும், கதிர் அறுக்க அரிவாளும் பயன்படுத்தப்பட்டது. இவர்கள் பால், பாலாடைக்கட்டி, வெண்ணெய், மீன், இறைச்சி, தேன் ஆகியவற்றை உணவாகக்கொண்டனர். இதற்காக மாடு, ஆடு, செம்மறி ஆடுகளையும், தேனீக்களையும் வளர்த்தனர். வலை வீசியும், தூண்டில் போட்டும் மீன் பிடித்தனர். கருவாடு தயாரிக்கவும் அறிந்திருந்தனர்.

## யூபிரதீஸ் - தைகிறிஸ் நதிக்கரை மக்களின் உடை

இந்நதிக்கரை மக்கள் (சுமேரியர்) செம்மறி ஆடுகளின் உரோமத்தினாலான கம்பளி ஆடைகளை உபயோகித்தனர். லினன் ஆடைகளையும் அணிந்தனர். பெரும்பாலான லினன் ஆடைகள் எகிப்திலிருந்தே பெறப்பட்டன. சுமேரியர் தாம் நெய்த கம்பளியை மிருதுவாக்கவும், வேலைப்பாடுகள் செய்து வர்ணந்தீட்டவும் அறிந்திருந்தனர். உடல் முழுவதையும் மறைத்து ஆடை அணிவதே இவர்களது பழக்கமாகவிருந்தது. வெவ்வேறு தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்கள், தொழிற் குழுக்களை அமைத்துச் செயற்பட்டனர். இந்த வகையில் துணிகளை நெய்த நெசவாளர் ஒரு தொழிற் குழுவுக்கு உரியவராயினர்.

## யூபிரதீஸ் - தைகிறிஸ் நதிக்கரை மக்களின் கட்டிடக்கலை

சுமேரியர்கள் மூன்று வகைப்பட்ட வீடுகளையும், மாபெரும் மாளிகைகளையும், கோயில்களையும் நிறுவியுள்ளனர். உலர்ந்த செங்கற்களினாலான கூம்பு வடிவ வீடுகளில் சாதாரண மக்கள் வாழ்ந்தனர். சுட்ட செங்கற்களினாலான நீள் சதுர வடிவ வீடுகளில் செல்வந்தர்கள் வாழ்ந்தனர். சுட்ட செங்கற்களினாலான மத்தியில் சதுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் முற்றத்தைக்கொண்ட வீடுகளில் பிரபுக்கள் வாழ்ந்தனர். கல்லினாலான மேடையில் 200 அறைகளடங்கிய மாளிகை ஒன்றைக் கட்டியுள்ளனர். சிகுராக் என்றழைக்கப்பட்ட கோயில் நகரின் மத்தியில் நிறுவப்பட்டிருந்தது.

## யூபிரதீஸ் - தைகிறிஸ் நதிக்கரை மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும்

இங்கு வாழ்ந்த மக்கள் பல தெய்வங்களை வழிபட்டனர். இவற்றில் முக்கிய தெய்வங்களாக அனு, எனலே, என்கீ என்று மூன்று தெய்வங்கள் காணப்படுகின்றன. அனு மேலுலகத் தலைவனாகவும், எனலே புவிக்குத் தலைவனாகவும், என்கீ சமுத்திரங்களுக்குத் தலைவனாகவும் கொண்டு வழிபட்டுள்ளனர். ஒவ்வொரு நகரத்திற்கும் பிரதான தெய்வம் ஒன்றிருந்தது. தெய்வங்களுக்காகப் பல கோயில்கள் கட்டப்பட்டிருந்தன. இங்கு மதகுருமார்களே பிரதான வைத்தியர்களாக விளங்கினர். இவர்கள் தாவரங்களையும், பூண்டுகளையும் கொண்டு பல மருந்துகளைத் தயாரித்தனர். பொருட்களை ஏற்றிச்செல்ல கழுதைகளையும், பிரயாணஞ் செய்வதற்குப் பலவகையான படகுகளையும், சக்கரவண்டிகளையும் பயன்படுத்தினர்.

## யூபிரதீஸ் - தைகிறிஸ் நதிக்கரை மக்களின் இலக்கியமும், கலைகளும்

சுமேரியரும் வனை சில்லின் உதவியுடன் அழகான மட்பாண்டங்களைச்செய்து, வேலைப்பாடுகளையும் வரைந்தனர். இவர்கள் சிரேர்து முறைக்கேற்பச் சிலைகளை வார்த்தனர். கம்மாளர், கொல்லர் தச்சர், பொற்கொல்லர், சிற்பிகள், செதுக்கும்கலை வல்லுநர், கண்ணாடிப் பொருட்கள் செய்பவர் போன்ற பல்துறைகளில் தேர்ச்சி பெற்றோர் காணப்பட்டனர். இவர்களது செதுக்கற்கலையில் போரையும், சமாதானத்தையும் சித்தரிக்கும் இலச்சினை குறிப்பிடத்தக்கதாகும். வீணை, கைத்தாளம், புல்லாங்குழல், மேளம் ஆகிய இசைக் கருவிகள் பொறிப்புக்களில் காணப்படுவதால் சங்கீதத்திலும், நடனத்திலும் கவனம் செலுத்தினர் என்பதும் புலனாகின்றது.

## நைல் நதிக்கரை மக்களின் உணவு

நைல்நதிக்கரை மக்கள் வயலைப் பண்படுத்தல், தானியங்களை விதைத்தல், அறுவடை செய்தல், சூடுமிதித்தல், விளைச்சலை சேமித்து வைத்தல் ஆகிய நடவடிக்கைகளில் உடல் வருந்தி உழைத்தனர். எகிப்தியர் பல பயிர்களைப் பயிரிட்டனர். அவற்றுள் கோதுமை, வாற்கோதுமை, திராட்சை, பேரீந்து, ஒலிவ், வெங்காயம், கோவா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை ஆகியன குறிப்பிடத்தக்கதாகும். இவற்ரேடு கால் நடைகள் மூலம் பெறப்பட்ட பாலும், இறைச்சியும், பறவைகளும், நன்னீர் மீன்களும் அவர்களின் உணவாக அமைந்தன. இவர்கள் தானிய ரொட்டியுடன் இறைச்சி, மீன், பால், திராட்சை ஆகிய வற்றை நாளாந்த உணவாகக் கொண்டனர். ஆனல் இங்கிருந்த வறிய மக்கள் இவ்வகை உணவுகளை சுவைத்து அனுபவிக்கும் பாக்கியம் பெற்றிருக்கவில்லை.

## நைல் நதிக்கரை மக்களின் உடை

நைல் நதிக்கரை மக்கள் அதிகமாக லினன் ஆடைகளையே அணிந்தனர். இதனல் சணல் உற்பத்தியிலீடுபட்டனர். சணல் நாரைக்கொண்டு மிக மென்மையான துணிவகைகளை நெய்தனர், துணிக்கு வர்ணந் தீட்டுவதிலும் பயிற்சி பெற்றிருந்தனர். ஆண், பெண் இருபாலாரும் ஒரே வகையான நுண்ணிய மென்மையான உடைகளையே அணிந்தனர். தொப்பி, சப்பாத்து, ஆபரணங்களையும் அணிந்தனர். பெரும்பாலான ஆபரணங்கள் உருண்டை மணிகளாலானவையாக இருந்தன. நறுமணப் பொருட்களையும், பொடிகளையும், நறுமணதைலங்களையும் உபயோகித்தனர். சில ஆண்களும், பெண்களும் தமது தலைமுடியை வெட்டி அழகாக சிகை அலங்காரம் செய்தனர்.

## நைல் நதிக்கரை மக்களின் கட்டிடக்கலை

நைல் நதிக்கரையில் வசித்த சாதாரண மக்களும், விவசாயிகளும் களி மண்ணினலும், செங்கற்களினலும் கட்டப்பட்ட வீடுகளில் வசித்தனர். பெரும்பாலான வீடுகளுக்கு ஒரு அறையே அமைந்திருந்தது. செல்வந்தர்களுடைய வீடுகள் செங்கற்களினல் அநேக அறைகளுடன் கட்டப்பட்டிருந்தன. சுவர்களுக்குப் பூச்சு பூசப்பட்டிருந்தது. கூரைகளுக்கு மரங்கள் பயன் படுத்தப்பட்டிருந்தன. இருமாடிகளைக் கொண்ட வீடுகளும் காணப்பட்டன. விருந்தினர் மண்டபம், பெண்களுக்குரிய அறை, சமயலறை, படுக்கையறை, குளியலறை என அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. விலையுயர்ந்த தளபாடங்களைப் பயன்படுத்தினர். ஆனல் சாதாரண ஏழை மக்கள் மரத்தினலான பெட்டிகள், ஆசனங்கள் போன்ற சாதாரண தளபாடங்களையே உபயோகித்தனர். அரசமாளிகைகளையும், கோயில்களையும், பிரமிட்களையும் கட்டினர். பாறைகளைக் குடைந்து கோயில்களையும், கல்லறைகளையும் கட்டினர். இக்கட்டிடங்களில் காணப்படும் அழகு வாய்ந்த தூண்கள் இவற்றின் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நைல்நதிக்கரை மக்களின் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

நைல்நதிக்கரை மக்கள் பல்வேறு தெய்வங்களை வழிபட்டுள்ளனர். இத்தெய்வங்களுள் ஓசிரிஸ், ரு ஆகிய இரண்டும் இவர்களின் பிரதான தெய்வங்களாகும். இத்தெய்வங்களை வழிபாடு செய்வதற்காகக் கோயில்களைக் கட்டினர். இறப்புக்குப் பின் பிறப்பு உண்டென்ற நம்பிக்கை எகிப்தியர்களிடையேயும் காணப்பட்டது. இவர்களின் சுகாதார நடவடிக்கைகளில் மதகுருமார் முக்கியவிடம் பெற்றனர். இவர்கள் இறந்த பேரோக்களினதும், பிரபுக்களினதும், சடலங்களை மருந்திட்டுப் பழுதடையாமல் பாதுகாத்தனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்தபோதும் இச்சடலங்களை (எகிப்தியமமி) இன்றும் சில நூதனசாலைகளில் காணக்கூடியதாகவுள்ளது.

## நைல்நதிக்கரை மக்களின் இலக்கியமும் கலைகளும்

எகிப்தியர் சிறந்த இலக்கியங்களைப் படைப்பதிலும் திறமை பெற்றிருந்தனர். இவ் இலக்கியங்களுள் சிறுகதைகளும், நாவல்களும் இருந்தன. இறந்தவர்கள் பற்றிய கதைகள் அடங்கிய நூல் இவர்களின் சிறந்தவொரு கலைப்படைப்பாகும். சிறுகதைகளுள் சினுவின் கதைகள் மிகவும் பிரபல்யமானவை. இவர்கள் ஓய்வு நேரங்களை கலைஆக்கங்களில் செலவிட்டனர். களிமண்ணினாலும், உலோகங்களினாலும் பலவகையான பாண்டங்களை உருவாக்கினர். மட்பாண்டங்களை செய்வதற்கு குயவர் வளைசில்லை உபயோகித்தனர். இப்பாண்டங்களில் வேலைப்பாடுகளை வரைந்து வர்ணந்தீட்டினர். சிரேபர்து முறைக்கேற்ப வெண்கலச் சிலைகளை வார்த்தெடுத்தனர். மெழுகினால் சிலையின் மறுபடிவம் ஒன்றைச் செய்து பின்னர் அதன் மீது உலோகத்தை வார்த்து சிலைகளை அமைப்பதே சிரேபர்து முறையாகும். இவர்கள் சிற்பக் கலையிலும், ஓவியக்கலையிலும் வல்லமை பெற்றிருந்தனர். ஸ்பிங்ஸ் எனப்படும் எகிப்திய விக்கிரகங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

# இலங்கையின் பூர்வீகக் குடிகள்

இலங்கையின் வரலாறு மிகவும் பழைமையானது. இலங்கையின் ஆதிவரலாறு பற்றிக் கூறும் நூல் மகாவம்சமாகும். விஜயனின் இலங்கை வருகையுடன் இலங்கையின் நாகரீக வரலாறு ஆரம்பமாகியதாகக் கூறப்படுகின்றது. அந்நூலிலே விஜயன் வருகைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் இலங்கையின் பூர்வீக மக்களாக இயக்கர், நாகர், வேடர் வாழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

## இராவணன் கதை

இந்தியாவில் வான்மீகி முனிவரால் எழுதப்பட்ட இராமாயணம் என்ற பெருங்காப்பியத்தில் இராவணன் கதை கூறப்பட்டுள்ளது. பூர்வீக இலங்கையை ஆண்ட மன்னருள் ஒருவனுக இராவணன் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளான். இவன் அரக்கர் கூட்டத்தைச் சேர்ந்தவன். மூவுலகையும் அடக்கி ஆண்ட மகா பராக்கிரமசாலி, சிவபக்தன். இறைவனிடம் இவன் பெற்ற வரத்திளுல் இயக்கர், தேவர், அரக்கர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தான். வடஇந்தியாவிலுள்ள அயோத்திமாநகரின் அரசிளங்குமாரஞன இராமனும் அவன் மனைவி சீதையும் தந்தையின் விருப்பப்படி பதினுன்கு வருடங்கள் காட்டில் வாழவேண்டிய நிலைமையேற்பட்டது.

இக்காலத்தில் இராவணனின் தங்கை சூர்ப்பனகை காட்டிலே இராமனைக் கண்டு அவனது அழகில் மயங்கி, அவனை நெருங்கிய போது இராமனின் தம்பி இலக்குவனுல் மூக்கரிபட்டாள். இதனைக் கேள்வியுற்ற இராவணன் கடுங்கோபங்கொண்டு இராமனைப் பழி வாங்கும் நோக்கில் புறப்பட்டான். சீதையைத் தான் மணஞ் செய்ய ஆசை கொண்டு சூழ்ச்சி செய்தான். மாரீசன் என்ற அரக்கனை மான் வடிவத்தில் சீதையிருந்த இடத்திற்கு அனுப்பினுன். மானின் அழகில் மயங்கிய சீதை மானைப் பிடித்துத் தரும்படி இராமனிடம் வேண்டினுள். இராவணனின் சூழ்ச்சியை அறியாத இராமனும், மானைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்று விட்டான். மானைத் துரத்திச் சென்ற இராமனைக் காணுது தம்பி இலக்குவனும் தொடர்ந்து சென்றுன். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இராவணன் சீதையை கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறைவைத்தான். (மலைநாட்டிலுள்ள சீதாஎலியவே அன்றைய அசோகவனம் எனப்படுகின்றது.)

இராமன் இராவணனின் இச்செயலை தனது தூதுவனுன அனுமான் மூலம் அறிந்தான். கடுங்கோபங் கொண்டு பெரும்படை திரட்டி வந்து இராவணனை அழித்து சீதையை சிறை மீட்டான். இலங்கையும், இந்தியாவும் கடலால் பிரிக்கப்பட்டிருந்தமையால் தன் படைகளை ஏவி பாலம் அமைத்தான். இப்பாலமே மன்னருக்கும், இந்தியாவுக்கும் இடையேயுள்ள "இராமர் அணை" ஆகும். இராவணனுடன் ஏற்பட்ட யுத்தத்தில் இராமன் இராவணனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது வீரர்களையும் முற்றாக அழித்தான். பின் இராவணனின் தம்பி விபீஷணனை அரசனுக்கிச் சென்றான் என்று இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.

## இயக்கர்

இலங்கையின் ஆதிக்குடிமக்களாக இயக்கர், நாகர், வேடர் பற்றிய செய்திகள் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. இயக்கர்கள் இராட்சத இனத்தைச் சார்ந்தவர்களாகக் கூறப்பட்டுள்ளனர். இலங்கையிலுள்ள இயக்கர்களை அழித்து மனித குலத்தைத் தழைத்தோங்கச் செய்ய புத்தபெருமான் முதல்முறையாக இலங்கைக்கு விஜயம் செய்தார். இதற்காக புத்த பெருமான் மகியங்கனைக்கு வருகை தந்தபோது பேய்கள் கூத்தாடி அவரை வரவேற்றன. அங்கு இயக்கர்கள் எல்லோரும் ஒன்று கூடியிருக்கும் சமயம் பார்த்து அவர்களை அச்சுறுத்தும் நோக்கில் கடும் மழையையும், கடும் இருளையும், கடும் குளிரையும் உருவாக்கினார். இதனால் பீதியடைந்த இயக்கர்கள் புத்தபகவானை அணுகி தங்களது பீதியைப் போக்கி தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டினர்.

புத்தபகவானும் இயக்கர்களே! உங்களுடைய துயரங்களையும், பீதியையும் போக்குகின்றேன். இங்கே நான் உட்காருவதற்கு ஓர் இடம் தாருங்கள் என்று கேட்டார். அவர்களும் " இறைவனே! எமது தீவு முழுவதையும் வேண்டுமானாலும் தருகின்றோம். எங்களுக்குப் பயத்திலிருந்து விடுதலையளியுங்கள்." என்று கேட்டுக்கொண்டனர். புத்தபகவானும் அவ்வாறே கடும் மழையையும், இருளையும் குளிரையும் போக்கினார். இவ்வாறு இலங்கையிலிருந்த இயக்கர்களை இத்தீவிலிருந்தும் வெளியேற்றினார். தேவர்கள் அவ்விடத்தில் கூடினர். அவர்களுக்குப் புத்தபகவான் தர்மஉபதேசத்தைச் செய்தார் என்றும் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

## நாகர்

இலங்கையின் நாகதீபத்தில் நாகர்கள் வசித்து வந்தனர். நாக அரசவம்சத்தைச் சேர்ந்த அரசகுமாரர்களாகிய சூளோதரன் (சிறிய வயிறன்), மஹோதரன் (பெரியவயிறன்) ஆகிய சகோதரர்களுக்கிடையே ஒரு பெறுமதி வாய்ந்த இரத்தினக்கல் சிம்மாசனத்திற்காகப் போர் மூண்டது. அவர்களது போரை நிறுத்திச் சமாதானத்தைப் போதிப்பதற்காக புத்தபகவான் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு வந்தார். இவர் போர்க்களத்துக்கு மேலாக வானவெளியில் சஞ்சரித்த வண்ணம் நாகர்மீது அடர்ந்த இருளைப் பரவச்செய்தார். அதனால் நாகர்கள் பீதியடைந்தனர். புத்தபக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் பீதியடைந்தவர்களைத் தேற்றி மீண்டும் அங்கு ஒளிபிறக்கச் செய்தார். புத்தபகவானைக் கண்டதும் அவர்கள் மகிழ்ச்சியடைந்து அவரைப் போற்றினர். பின்னர் புத்தபகவான் அவர்களுக்குச் சமாதான நெறியைப் போதித்தார்.

சமாதானப் போதனையால் தெளிவடைந்த சூளோதரனும், மஹோதரனும் தங்களது சண்டைக்குக் காரணமாகவிருந்த இரத்தினக்கல் சிம்மாசனத்தை புத்தபெருமானுக்கே கொடுத்தனர். புத்தர் கீழே இறங்கி வந்து அந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். நாகர் மன்னன் கொடுத்த உணவையும், பானத்தையும் அருந்தினர். பின்னர் புத்தபகவான் அந்த இரத்தினசிம்மாசனத்தையும், ஓர் விருட்சத்தையும் நாகமன்னனிடம் கொடுத்து அதே இடத்தில் வைத்து பூசித்து வருமாறு கூறினுர் என்றும், மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

## வேடர்

இலங்கையின் பூர்வகுடிகளாக வேடரே குறிப்பிடப்படுகின்றனர். இன்றும் சிறுதொகையினராகவுள்ள முன்னேற்றம் கண்ட வேடர் சமூகம் இலங்கையில் காணப்படுகின்றது. ஆதியில் வேடர்கள் இலங்கையின் கிழக்கு, வடகிழக்கு, ஊவாப்பிரதேசக் காடுகளில் வசித்தனர். பழங்கள், தானியங்கள் ஆகியவற்றைச் சேகரித்தும், சேனைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டும், வேட்டையாடியும் தமது வாழ்க்கையை நடாத்தினர். வேட்டையாடுவதற்குத் துணையாக நாயை வளர்த்தனர். இறைச்சி, தேன், பழங்கள், மரவள்ளிக் கிழங்கு இவர்களின் உணவாக இருந்தது.

ஆரம்பத்தில் கல்லினுலான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். கோடாரி, கைக்கோடாரி, அம்பு, வில், கொக்கி, கொளுவி இவர்கள் பாவிக்கும் பிரதான ஆயுதங்களாகும். பின்னர் கொல்லனின் துணையுடன் உலோகங்களினுலான ஆயுதங்களையும், உபகரணங்களையும் செய்து கொண்டனர். திறந்த குடில்களே இவர்களின் வீடுகளாகும். ஆரம்பத்தில் இவர்கள் உடைகள் இலை, குழைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தன. பின்னர் பண்டமாற்று முறையிலீடுபட்டபின் உடம்பை மறைத்துக்கொள்ள போதுமான அளவு துணியைப் பயன்படுத்தினர். பல்வேறு ஆவிகளின் வழிபாட்டில் ஈடுபட்ட இவ்வேடர்கள், மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கையிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கபாகு

இந்தியாவின் லாலா (பஞ்சாப்) நாட்டு அரசனுக்கு ஓர் அழகான மகள் இருந்தாள். அவ்அரசிளங்குமாரி ஒருநாள் தனது வீட்டை விட்டுப் புறப்பட்டாள். மகத நாட்டுக்குச்சென்ற ஒரு வணிகக்குழுவுடன் சேர்ந்து காட்டு வழியாகச்சென்ற சமயம் ஒரு சிங்கம் அவர்களைத் துரத்தியது. அப்பொழுது அரசிளங்குமாரி பயப்படாது நின்றாள். சிங்கம் அவள்மேல் ஆசை கொண்டு அவளைத் தூக்கிச்சென்று தனது குகையில் வைத்து வாழ்ந்து வந்தது. இதன் பயனாக அவளுக்கு இரு குழந்தைகள் பிறந்தன. அவள் ஆண்குழந்தைக்கு சிங்கபாகு என்றும், பெண் குழந்தைக்கு சிங்கசிவலி என்றும் பெயரிட்டு வளர்த்து வந்தாள். 16 வயதடைந்த சிங்கபாகு சிங்கம் உணவு தேடச்சென்ற சமயம் பார்த்து தாயையும், தங்கையையும் கூட்டிக்கொண்டு லாலா நாட்டிற்கு மீண்டான்.

இதன்பின் சிங்கபாகு தங்கை சிங்கசிவலியையே பட்டத்தரசியாக்கி நாட்டை ஆண்டான். இவர்களிற்கு 32 குழந்தைகள் பிறந்தன. இவர்களின் மூத்தவனே விஜயனாவான். விஜயனின் கெட்ட நடத்தைகளால் நாட்டு மக்கள் பெரும் துன்பம் அடைந்தனர். சிங்கபாகுவிடம் முறையிட்டனர். சிங்கபாகு கட்டுப்பாடு, கீழ்ப்படிவு இன்றி நடந்த விஜயனையும், அவனது தோழர்கள் 700 பேரையும் சேர்த்து ஒரு கப்பலில் ஏற்றி நாடுகடத்தினான். இவ்வாறு தந்தையால் நாடு கடத்தப்பட்ட விஜயனும், அவனது தோழர்களும் இலங்கையில் வந்திறங்கினர். இவ்வாறு சிங்கபாகுவைப்பற்றி நாட்டார் கதைகள் கூறுகின்றன.

## விஜயனின் இலங்கை வருகை

சிங்கபாகுவினால் நாடுகடத்தப்பட்ட விஜயனும், அவனது தோழர்களும் இலங்கையின் வடமேற்குக் கரையில் வந்து இறங்கினர். இவ்வாறு கரையேறிய இவர்கள் இளைப்பாறுவதற்காக உள்ளங்கைகளை ஊன்றிய வண்ணம் கடற்கரையில் அமர்ந்தனர். இவர்களின் உள்ளங்கை நிலத்திலூன்றியதால் செந்நிறமாகியது. இதனால் இவர்கள் இப்பிரதேசத்திற்குத் 'தம்பபண்ணி'' என்று பெயரிட்டனர். அதன் பின்னர் தீவு முழுவதற்குமே தம்பபண்ணி என்ற பெயர் வழங்கலாயிற்று. மகாவம்சத்தின் கூற்றுப்படி புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்த தினத்திலேயே விஜயனும் இலங்கையில் காலடி வைத்தான். விஜயனின் தோழர்களிலொருவன் நாய் ஒன்றைக் கண்டான். மனிதர் வாழும் இடத்திலேயே நாய் இருக்கும் என்றெண்ணிய அவன் நாயைப் பின்தொடர்ந்து சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு துணி நெய்துகொண்டிருந்த குவேனி தென்பட்டாள். இவள் மனித உருவில் நடமாடிய இயக்கினியாவாள். தண்ணீர்த் தாகத்தால் வாடிய அவன் பக்கத்திலிருந்த குளத்துக்குள் இறங்கினன். அவ்விடத்திலேயே குவேனி அவனைச்சிறை செய்தாள். இவ்வண்ணம் ஒவ்வொருவராக வந்த 700 பேரையும் சிறைப்பிடித்தாள். இறுதியில் தன் தோழர்களைத் தேடிக்கொண்டு சென்ற விஜயன், குவேனியை அச்சுறுத்தித் தன் தோழர்களை விடுவிக்கும்படி கேட்டான். அச்சமுற்ற குவேனி விஜயனுக்கு இராச்சியம் ஒன்றைப் பெற்றுத் தருவதாகவும், அவனுக்குப் பணி புரிவதாகவும் கூறித் தன்னைக் கொல்லாமல் விடும்படி கெஞ்சினள். விஜயனும் இவ்வொப்பந்தத்திற்கு உடன்பட்டான். விஜயனின் தோழர்களை விடுவித்த குவேனி அவர்கள் எல்லோருக்கும் உணவளித்தாள்.

இதன் பின்னர் விஜயன் குவேனியைத் திருமணம் செய்துகொண்டான். அன்றிரவு நித்திரை செய்யும்பொழுது சத்தம் ஒன்று கேட்டது. விஜயன் சத்தம் என்னவென்று விசாரித்தான். அதற்கு குவேனி சீரவஸ்து நகரத்தின் இயக்கத்தலைவனின் மகளுக்கு திருமண வைபவம் நடைபெறுகின்றது. அங்கு நடக்கும் நாட்டிய, இசை நிகழ்ச்சிகளின் சத்தமே அது என்றும் கூறினள். அங்கு பெருந்திரளான இயக்கர்கள் கூடியிருப்பதால், அவ்விரவிலேயே அவர்களைக் கொன்ருல் அரசாட்சியைக் கைப்பற்ற முடியும் என்றும் ஆலோசனை கூறினள். அவள் கூறியதை ஏற்றுக்கொண்ட விஜயன் அவளுடைய உதவியுடன் இயக்கர்களைக் கொன்று இலங்கையின் அரசனுனன். விஜயனின் தோழர்களில் சிலர் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று கிராமங்களை அமைத்தனர்.

## இலங்கைக்கு ஆரியர் வருகை

மகாவம்சத்தின்படி இலங்கைக்கு முதன் முதல் வந்த ஆரியர் விஜயனும் அவனது தோழர்களுமேயாவர். விஜயன் இலங்கையின் வடமேற்குக் கரையில் காலடி வைத்ததாகவும், அப்பிரதேசத்திற்கு 'தம்பபண்ணி' எனப் பெயரிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இலங்கைக்கு முதன் முதலில் வந்த ஆரியர் பற்றி வேறு பல கதைகளும் காணப்படுகின்றன. போதிசத்துவரின் வாழ்க்கைக்கதை அடங்கியுள்ள 550 ஜாதகக்கதைகள் என்ற நூலிலுள்ள "வலாஹஸ்ஸ" என்ற கதையிலும் ஆரியர் வருகை பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. கி. பி. 7ம் நூற்றுண்டில் இந்தியாவுக்கு வந்த சீனவைச்சேர்ந்த பிக்குவாகிய 'ஹியுங்சாங்' என்பவரின் பிரயாணக் குறிப்புக்களில், இலங்கையில் முதன் முதல் குடியேறிய ஆரியர் கூட்டத்தைப்பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் காணப்படுகின்றன. இந்தியாவிலுள்ள அஜந்தா குகைகளிலுள்ள சுவரோவியமொன்றில் இலங்கைக்கு முதன் முதல் வந்த கூட்டத்தினரின் வருகை சித்தரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஆரியர் கூட்டம் வருவதற்கு முன்னர் இங்கு மக்கள் வாழ்ந்துள்ளமைக்கும் ஆதாரங்கள் உண்டு. இலங்கைக்கு வந்த ஆரியர்கள் வட இந்தியாவின் மேற்கு, வடமேற்குப் பகுதிகளிலிருந்து வந்தனர். இவர்கள் சிந்து, குஜராத் பிரதேசங்களினூடாகப் பிரயாணம் செய்து இந்தியாவின் பாருகச்சம், சுப்பாரக் துறைமுகங்களினூடாக இலங்கைக்கு வந்தனர். இவர்கள் இலங்கையின் மேற்கு, வடமேற்குக் கரையோரங்களில் வந்திறங்கினர். பின்னர் நதிக்கரையோரங்களில் கிராமங்களை அமைத்துக்குடியேறினர்.

ஆரியர் வட இந்தியாவின் கிழக்குப் பிரதேசத்திலுள்ள வங்காள நாட்டின் தாம்பிரலிப் துறைமுகத்தினூடாகவும் இலங்கைக்கு வந்தனர். இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென்கிழக்குக் கரையோரங்களில் இறங்கி நதிக்கரைகளில் கிராமங்களை அமைத்தனர். விஜயனின் பின் அரசியாகிய பண்டு வாசுதேவ மன்னனின் மனைவியாகிய "பத்தகச்சானு" வும், அவளது சகோதரர்களும் இந்த மார்க்கமாகவே வந்தனர். பத்தகச்சானுவின் சகோதரர்களான ராம, ரோஹண, திகாயு, உருவெல, அநுராத, விஜித ஆகியோர் தங்கள் பெயர்களில் கிராமங்களை அமைத்தனர்.


## இலங்கையில் ஆரியர் குடியேற்றங்கள்

இந்தியாவிலிருந்து வடமேற்கு, மேற்கு வழியாக இலங்கைக்கு வந்த ஆரியர்கள் மல்வத்து ஓயா, கலா ஓயா, களனி கங்கை ஆகிய நதிக்கரைகளில் குடியேறினர். இந்தியாவிலிருந்து கிழக்கு, தென் கிழக்கு வழியாக வந்த ஆரியர்கள் மகாவலிகங்கை, கும்புக்கன் ஓயா, மாணிக்ககங்கை, கிரிந்தி ஓயா, வளவைகங்கை ஆகிய நதிக் கரைகளிலும் குடியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்வத்து ஓயாவின் ஆற்று முகத்தில் மஹாதித்த (மாதோட்டம்) என்ற துறைமுகம் இருந்தது. அக்காலத்தில் வியாபாரிகள் இதனூடாகவந்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். விஜயனின் தோழர்களான உபதிஸ்ஸ, அநுராத என்ற அமைச்சர் இருவர் மல்வத்து ஓயாவின் கரையில் உபதிஸ்ஸகாமம், அநுராதகாமம் என்ற இரு கிராமங்களை அமைத்தனர். இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களான உருவெல, விஜித, உதேனி என்ற அமைச்சர்களும் தங்கள் பெயர்களில் கிராமங்களை உருவாக்கினர்.




விஜயனும், தோழர்களும் வந்திறங்கிய தம்பபண்ணி (தம்மன்னு) இவர்களால் அமைக்கப்பட்ட மற்றுமோர் கிராமமாகும். மேற்குத்திசையாக வந்தவர்களால் களனி கங்கைக்கரையில் அமைக்கப்பட்ட களனி மற்றுமோர் கிராமமாகும். கிழக்குப்பகுதியாக வந்த ஆரியர் கோகண்ண என்ற துறைமுகத்தில் வந்திறங்கி அங்கோர் கிராமத்தை நிறுவினர். வேறு சிலர் தென்கிழக்குப் பகுதியில் காஜரகாமம் (கதிர்காமம்), சந்தனகாமம் என்ற கிராமங்களையும் உருவாக்கினர். வடக்கே ஜம்புகோளபடுண துறைமுகத்தினூடாக வந்தவர்கள் அங்கும் குடியேற்றத்தை உருவாக்கியதாகவும் கருதப்படுகின்றது.

## பண்டுகாபய மன்னன்

விஜயனுக்குப்பின் அரசனான பண்டு வாசுதேவனின் மகனே பண்டுகாபயனுவான். பண்டுகாபயனின் தாய் பத்த கச்சானு முதன் முதல் இலங்கை வந்த ஆரியர் கூட்டத்தின் வழிவந்தவள். ஆனால் தந்தை பண்டு வாசுதேவன் பின்னர் இலங்கை வந்த ஆரியர் கூட்டத்தைச் சார்ந்தவன். பண்டுகாபயன் தனது ஆட்சிக்காலத்திலேயே மேற் குறிப்பிட்ட இரு சாராரையும் ஐக்கியப் படுத்தினுன். அநுராதபுரத்தைத் தனது தலைநகராகத் தேர்ந்தெடுத்தான். ஒழுங்கமைக்கப்பட்ட ஆட்சிமுறையைக் கொண்டு வந்தான். ''கம்சபா'' நிர்வாக ஆட்சிமுறைகள் கொண்டு வரப்பட்டன. ஆரியர் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறமுன், இங்கு வாழ்ந்த பழங்குடி மக்களும் பண்டுகாபயனின் தலைமையை ஏற்றனர்.

அநுராதபுரம் பண்டுகாபயன் காலத்தில் ஒரு நகரமாக வளர்ச்சியுற்றது. தலைநகருக்கு அவசியமான கட்டிடங்களை அமைத்தான் நகரைச்சுற்றி மதில் கட்டினான். நகரத்தின் நான்கு வாயில்களுக்கு அண்மையிலும் நான்கு கிராமங்களை அமைத்தான். நகர மக்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கு ஆவன செய்தான். நகர வீதிகளை அழகு படுத்தினான். வீதிகளையும், வீதிவடிகால்களையும் சுத்தமாக வைத்திருப்பதற்காக வேலையாட்களை அமர்த்தினான். இடுகாடுகளை அமைத்து, காவலுக்கு ஊழியர்களை அமர்த்தினான். நகரத்திற்கும் விவசாயத்திற்கும் தேவையான நீரை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக "அபயவாவி" என்ற குளத்தைக் கட்டினான். இக்குளமே இலங்கையின் முதல் குளமாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு பௌத்த சமயத்தின் வருகை

## தேவநம்பியதீச மன்னன்

இந்தியாவை ஆட்சிசெய்த அசோகசக்கரவர்த்தி பௌத்த சமயத்தை உலகெங்கும் பரப்பும் முயற்சியில்ஈடுபட்டபோது பௌத்தம் இலங்கைக்கும் அறிமுகமாகியது. அசோகச்சக்கரவர்த்தி பௌத்த சமயத்தைப் பரப்பும் நோக்கில் பௌத்த தூதுக்குழுக்களை பல நாடுகளுக்கு அனுப்பினான். அசோகச்சக்கரவர்த்தி இந்தியாவை ஆண்ட காலத்தில் இலங்கையைத் தீசமன்னன் (கி. மு. 247-204) ஆண்டு கொண்டிருந்தான். தீசன் அரசனானபின் தனது மருமகனாகிய அரிட்டன் தலைமையில் தூதுக்குழு ஒன்றை அசோகனிடம் அனுப்பினான். அநேக விலையுயர்ந்த பரிசுப்பொருட்களைத் தூதுக்குழுவினர் கொண்டு சென்றனர்.

இக்குழுவினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜம்புகோளபடுண என்ற இடத்தில் கப்பலேறி, ஏழு தினங்கள் பிரயாணஞ்செய்து வங்காளத்திலுள்ள தாம்பிரலிப்தி துறைமுகத்தை அடைந்தார்கள். அங்கிருந்து மௌரிய சாம்ராச்சியத்தின் தலைநகராகிய பாடலிபுரத்துக்குச் சென்றார்கள். அங்கு அசோக சக்கரவர்த்தியைச் சந்தித்துத் தாம் கொண்டு சென்ற பரிசுகளைச் சமர்ப்பித்தனர். அசோகன் குழுவினரை வரவேற்றுத் தீசனின் முடிசூட்டு விழாவிற்கு அவசியமான பொருட்களைக் கொடுத்து அனுப்பினான். தான் பௌத்த சமயத்தில் சேர்ந்ததுபோல் தீசனும் பௌத்தத்தைத் தழுவ வேண்டுமென்று ஆலோசனை கூறி அனுப்பி வைத்தான். அசோகச் சக்கரவர்த்தியின் ஆலோசனைப்படி முடிசூடிய தீசன் தேவநம்பிய என்ற சிறப்புப் பெயரைப்பெற்று தேவநம்பியதீசன் என்று புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றான். பௌத்த சாசனத்தை இலங்கையில் நிலைநாட்டிய பெருமை தேவநம்பியதீசனையே சாரும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவன் ஆற்றியசேவை அளப்பரியது. திஸ்ஸவாவியைக் கட்டி விவசாய நடவடிக்கையை ஊக்குவித்தான்.

## மகிந்த தேரர் வருகை

பௌத்த தர்மத்தை இலங்கையில் போதிப்பதற்காக அசோகச் சக்கரவர்த்தி தனது மகனான மகிந்ததேரர் தலைமையில் இலங்கைக்கு தூதுக்குழுவை அனுப்பினான். மான்வேட்டைக்குச் சென்றிருந்த தீசன் மிகிந்தலையில் மகிந்ததேரரைச் சந்தித்தான். மகிந்ததேரர் தீசனோடு உரையாடியபின், அவனது பக்குவத்தையறிந்து அவனுக்கு பௌத்த தர்மத்தைப் போதித்தார். இப்போதனைகளால் தெளிவடைந்த தீசனும், அவனது சகாக்களும் பௌத்த மதத்தைத் தழுவினர். பின்னர் மகிந்ததேரரை அநுராதபுரம் அழைத்துவந்து பெருந்தொகையான மக்களுக்கு பௌத்த தர்மத்தை உபதேசிக்க வைத்தான். இதனால் பெரும்தொகையான மக்கள் பௌத்த மதத்தைத் தழுவினர். இலங்கையில் இக்காலத்தில் முறையான மதம் இல்லாதிருந்தமையும், மக்கள் அரசனைப் பின்பற்றியமையும், குழுவினர் தர்மத்தை உபதேசித்த மொழிக்கும் மக்கள் பேசிய மொழிக்கும் அதிக வேறுபாடு இல்லாதிருந்தமையும், மக்கள் தர்மத்தைப் புரிந்து கொண்டமையும் பௌத்த சமயத்தின் பரம்பலை ஊக்குவித்தது. கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்த தர்மம் நிலைபெற்றது.

## மகாவிகாரையின் தோற்றம்

தர்ம உபதேசத்தை ஆற்றியபின், இரவைக் கழிப்பதற்காக மகிந்ததேரர் மிகிந்தலைக்கு திரும்பிச்செல்ல எண்ணினார். இதனையறிந்த தீசன் மகிந்த தேரரும், குழுவினரும் தங்குவதற்காக மகாமேகவனப் பூஞ்சோலையை வழங்கினான். இப்பூஞ்சோலை அநுராதபுர நகரின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இச்சோலை பிக்குகள் வசிப்பதற்கு உகந்த அமைதியான இடமாக விளங்கியதால், தீசன் அங்கு கோயில்களையும், தியானக்குடில்களையும், அன்னதானச் சாலைகளையும் அமைத்தான். இவை யாவற்றையும் உள்ளடக்கியதே மகாவிகாரையாகும். உலகின் மிகப்பெரிய பௌத்த நிறுவனங்களில் ஒன்றாக மகாவிகாரை இன்று கருதப்படுகின்றது. மகாவிகாரையில் வைத்தே திரிபிடகத்திற்குச் சிங்கள உரை எழுதப்பட்டது. மகாவிகாரை இலக்கியத்துறைக்கு ஆற்றிய சிறந்த சேவை இதுவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூபாராம தாதுகோபம்

புத்தபகவானின் வலது காறை எலும்பைப் பேணி வைப்பதற்காக அமைக்கப்பட்ட சைத்தியமே தூபாராமதாதுகோபமாகும். இத்தாதுகோபம் தேவநம்பியதீசனால் கட்டப்பட்டது. இது இலங்கையில் முதல் கட்டப்பட்ட தாதுகோபமாகும். புத்தரின் புனிததாதுக்கள் அடக்கம் செய்யப்பட்ட தூபாராம இன்றும் விகாரையின் பிரதான அங்கமாகத் திகழ்கின்றது. இதன் அடித்தள விட்டம் 17.8மீற்றராகும். இது முதன் முதலில் இந்தியாவிலுள்ள சாஞ்சி தூபியைப் போலவே அமைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படுகின்றது. இத்தூபி பலமுறை திருத்தம் செய்யப்பட்டது. இது நெற்குவியலின் தோற்றத்தை ஒத்திருந்ததென்று தூபவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

## சங்கமித்தை வருகை

தேவநம்பியதீசனின் சகோதரனான மகாநாமனின் மனைவி அநுலாதேவி பிக்குணியாகுவதற்கு அவாவுற்றாள். அவள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மகிந்தேரரின் தங்கையான பிக்குணி சங்கமித்தை இலங்கைக்கு வரவழைக்கப்பட்டாள். சங்கமித்தை இலங்கைக்கு வரும்போது ஸ்ரீமகாபோதியின் (வெள்ளரசுமரம்) கிளை ஒன்றையும் கொண்டு வந்தார். இலங்கையில் அநுலாதேவியைத் தொடர்ந்து அநேக குலப்பெண்கள் பிக்குணிகளாக மாறினர் இதனால் இலங்கையில் பிக்குணிகள் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

சங்கமித்தையினால் கொண்டு வரப்பட்ட ஸ்ரீமகாபோதியின் கிளை அநுராதபுரத்தில் நாட்டப்பட்டது. இது உலகிலுள்ள மிகப்புராதன சரித்திரத் தொடர்புள்ள மரமாகும். இந்த மரம் நாட்டும் வைபவம் தீசனாலும், மக்களாலும் பெரும் உற்சவமாகக் கொண்டாடப்பட்டது. பின்னர் இம் மரத்தின் கிளைகள் இலங்கையின் பலபகுதிகளிலும் நாட்டப்பட்டன. இதனை மையமாகக் கொண்டு பௌத்த நிறுவனங்கள் தோன்றியதால் பௌத்தம் நாடெங்கும் பரவியது.

## இலங்கையில் பௌத்த கலாச்சாரம் பரவியமை

பொதுமக்களுக்கு இவ்வுலக வாழ்க்கை பற்றியும், அவ்வுலக வாழ்க்கை பற்றியும் அறிவுரை வழங்குதலை பிக்குகள் தமது கடமைகளாகக் கருதினர். பௌத்த சமய செல்வாக்கினால் மக்கள் எளிய வாழ்க்கை நடாத்தினர். தயவு, கருணை, அன்பு ஆகிய நற்குணங்கள் மக்களிடையே வளர்ந்தது. பிக்குணிகள் சங்கம் அமைக்கப்பட்டதால் பெண்களுக்கு சமுதாயத்தில் உயர்ந்த இடம் கிடைத்தது. ஒருவர் சமூகத்தில் உயர்வதற்கும், தாழ்வதற்கும் காரணம் அவர் செய்கையேயன்றி அவர் குலம் அல்ல என்பது பௌத்தத்தின் படிப்பினையாகும். நாட்டின் நிர்வாகத்தில் பௌத்த செல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு வேருன்றியது. பிக்குகள் அரசர்களுக்கு ஆலோசகர்களாக இருந்தவர். இலங்கையில் பௌத்தத்தின் வருகைக்கு முன்பிருந்த பிராமணர் ஆதிக்கமும், பிராமணர் குலமும் மறைந்தன. பிக்குகள் வசிப்பதற்கும், தியானஞ்செய்வதற்கும் கோயில்கள், கட்டிடங்கள் கட்டப்பட்டன.

பௌத்தமதச் செல்வாக்கினுல் நுண்கலைகள் மட்டுமன்றி கல்வி யும், இலக்கியமும் வளர்ச்சி பெற்றன. பௌத்த மடங்கள் கல்வி புகட்டும் நிலையங்களாக விளங்கின. அநுராதபுர கால மகாவிகா ரையும், அபயகிரி விகாரையும் அக்காலத்திலிருந்த இரண்டு சிறந்த கல்வி நிலையங்களாகும்.

## திராவிடர் வருகை

தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் வந்து குடியேறிய திராவிடர்களின் வழித்தோன்றல்களே இலங்கைத் தமிழர்களாவர். இந்தியாவுக்கு ஆரியர் வருவதற்கு முன்னர் திராவிடர்களே இந் தியாவில் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது. ஆரியர் வடஇந்தியாவில் பரவியதும்,திராவிடர் தென்னிந்தியாவிற்கு இடம் பெயர்ந்துள்ளனர் சூரதீஸமன்னன் காலத்தில் குதிரை வியாபாரத்திற்காக இலங் கைக்கு வந்த சேனன், குத்திகன் என்ற இரு தமிழ் வியாபாரிகள் இராச்சியத்தைக் கைப்பற்றியதாக மகாவம்சம் கூறுகின்றது இதன்பின் திராவிடர்கள் காலத்துக்குக்காலம் இலங்கை மீது படையெடுத்தனர். சேனன், குத்திகனின் பின் அசேலன் காலத்தில் எல்லாளன் படையெடுத்து வந்து அநுராதபுரத்தைக் கைப்பற்றி ஞன். எல்லாளன் காலத்திலேயே தமிழர் ஆதிக்கம் இலங்கையில் பரவியதாகக் கூறப்படுகின்றது.

## எல்லாள மன்னன்

இலங்கை மீது இரண்டாவது தமிழர் படை எடுப்பை நடத் தியவன் எல்லாள மன்னனுவான். இவன் இலங்கையில் ஆட்சிசெய்த அசேலனைக் கலைத்து விட்டு இலங்கையின் வடபகுதியில் தனது ஆட்சியை நிறுவியவன். குறிப்பாக இவனது நீதிதவருத ஆட்சி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தன்மகனுல் தவறுதலாகக் கொல்லப்பட்ட பசுக்கன்றின் தாய்க்கும், பாம்பிற்கு இரையாகிக் குஞ்சையிழந்த தாய்ப்பறவைக்கும், பருவந்தப்பிப் பெய்தமழையால் இடருற்ற ஒரு முதிய பெண்ணுக்கும் எல்லாளன் நீதி வழங்கிய தாகக் கூறப்படும் கதைகள் மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ளன. இவை எல்லாளனது செங்கோலாட்சியைப் புலப்படுத்த எழுந்த சான்றுகளாகும். சமயத்துறையில் பௌத்தத்துக்கு அவன் பகைமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டாதிருந்தமையைப் புலப்படுத்தவும் ஒரு கதை கூறப்படுகின்றது. அதாவது தான் சென்ற இரதத்ினால் தவறுதலாகச் சேதமுற்ற ஒரு தாதுகோபத்தைத் திருத்தி 15,000 கஹாபணங்களைச் செலவிட்டான் என அக்கதையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு நண்பர்க்கும், பகைவர்க்கும் சமநீதி வழங்கிய எல்லாளன் ஆட்சி 44 ஆண்டுகள் நீடித்தது.

# துட்டகைமுனு மன்னன் (கி. மு. 161-137)

உறுகுணை இராச்சியத்தின் மன்னனான காவந்தீசனுக்கும், விகாரதேவிக்கும் பிறந்த புதல்வர்களே துட்டகைமுனுவும், சத்தாதீசனுமாவர். காவந்தீசன் பிளவுபட்டிருந்த உறுகுணையை ஒன்றுபடுத்திய பெருமைக்குரியவன். துட்டகைமுனு சிறுவனாக இருந்தபோதே நாட்டுப்பற்றும், விடுதலையார்வமும் கொண்டிருந்தான். இதனைப் புலப்படுத்த மகாவம்சத்தில் சில கதைகள் கூறப்பட்டுள்ளன. அதாவது காவந்தீசன் தன்புதல்வர்களை அழைத்து நீங்கள் இருவரும் உங்களுக்குள் "சண்டையிடக்கூடாது எனவும், பௌத்தசங்கத்தினர்க்கு எப்போதும் பணிவாக இருக்கவேண்டுமெனவும், தமிழர்களுடன் போருக்கு போகக்கூடாதெனவும்" மூன்று வாக்குறுதிகளையளிக்குமாறு வேண்டியபோது, மூன்ருவது வாக்குறுதியை அளிக்க மறுத்த துட்டகைமுனு, தன் கால்களை முடக்கிக் கொண்டு படுத்திருந்தான். இதைக்கண்ட அவன் தாய் கைமுனுவை அவ்வாறு படுத்திருக்கக் காரணம் என்னவென்று விசாரித்தபோது ஒருபுறம் பரந்த இந்துசமுத்திரமும், மறுபுறம் தமிழரும் தனக்குத்தடையாக இருக்க எப்படிக் கால்களை நீட்டுவதெனக் கூறியதாக அக்கதையில் கூறப்பட்டுள்ளது.

காவந்தீசனின் பின் துட்டகைமுனு உறுகுணையின் மன்னனானன். உறுகுணையின் அரசுரிமையைத் தன் தம்பியுடன் போரிட்டு நிலைநாட்டினன். பின்னர் 44 ஆண்டுகளாகச் சோழர் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த இலங்கையின் வடபகுதியையும் மீட்டு ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்க விரும்பினன். பெரும்படை திரட்டினன். படையினருக்கு சேதம் ஏற்படாதிருக்க எல்லாளனைத் தனிச்சமருக்கு அழைத்தான். இவ்வறைகூவலை ஏற்ற எல்லாளன் வயது முதிர்ந்த நிலையில் இருந்தபோதிலும் இளைஞனான துட்டகைமுனுவுடன் கடும் சமர் புரிந்தான். ஈற்றில் எல்லாளன் தனது யானையின் காலால் மிதிபட்டு இறந்தான். இவ்வாறு போர் முடிவுற இறந்த தன் பகைவனின் சடலத்தை சகல மரியாதைகளுடனும் அடக்கம் செய்தான். எல்லாளன் கொலையுண்ட இடத்தில் அவனது நினைவுச் சின்னம் ஒன்றை எழுப்புவித்தான். அவ்வழியால் வரும் பவனிகள் வாத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியை இசைக்காது நிறுத்தி அஞ்சலி செலுத்த வேண்டுமெனவும் கட்டளையிட்டான். இதன்பின் இலங்கை முழுவதற்கும் மன்னனாகி 24 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

துட்டகைமுனு தனது ஆட்சிக்காலத்தில் பௌத்த சமயப்பணிகளுக்கு முதன்மை அளித்தான். மகாதூபம் என்ற ருவான்வெலிசாய, லோவமகாபாய, மிரிசுவேதி போன்றவற்றைக் கட்டுவித்து தேரவாத பௌத்தத்துக்கு அரும்பணியாற்றினான். துட்டகைமுனு நாட்டுக்கும், இனத்துக்கும், மதத்துக்கும் ஆற்றிய பெரும்பணிகளால் இலங்கை மன்னர்களின் முன்னணியில் திகழ்கின்றான். இவன்பின் இவன் தம்பியான சத்தாதீசன் (கி.மு 137-119) மன்னனானான். சத்தாதீசன் துட்டகைமுனுவின் பணிகளைத் தொடர்ந்து நிறைவு செய்தான். நாட்டின் பொருளாதாரத்துறை விருத்திக்குப் பெரும்பணியாற்றினான். திகாமடுள்ள பிரதேசத்தை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுத்தான். இவனது 18 ஆண்டு ஆட்சியின் பின் இலங்கையின் ஒற்றுமை சிதறுண்டது.

# வாலகம்பாகு மன்னன் (கி.மு. 103-77)

வாலகம்பாகுவின் ஆட்சி அரசியல், சமயம் ஆகிய இருதுறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இவனது ஆட்சி தொடங்கிய காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் மிகுந்திருந்தன. இதனால் தொடக்கத்திலேயே அவனது ஆட்சிக்கு ஆபத்து நேரிட்டது. தென்னிந்தியப்படையெடுப்பு இலங்கை மீது நடைபெற்றது. புலஹத்தன், பாகியன், பனையமாறன், பிளையமாறன், தாதிகன் ஆகிய பாண்டியப் பிரதானிகள் படையெடுத்து வந்து வாலகம்பாகுவை துரத்திவிட்டு 14 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். கி.மு. 89 இல் வாலகம்பாகு மீண்டும் படையெடுத்து வந்து தாதிகன் என்ற இறுதிப் பாண்டியமன்னனைத் தோற்கடித்து அரசைப்பெற்று 12 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

சமயப்பணிகளில் பெரும்பங்காற்றினான். திரிபிடக என்ற பௌத்த பாரம்பரியக் கோட்பாட்டு நூல்கள் எழுத்துருப்பெற்றன. அபயகிரி விகாரையைக் கட்டுவித்தான். அபயகிரி விகாரை மகாயான பௌத்த புதுமைக் கருத்துக்களை வரவேற்று வந்தது. மகாவிகாரையிலிருந்து அதன் கட்டுப்பாட்டை மீறி சில பிக்குமார் அபயகிரி விகாரைக்குச் சென்று தனிப்பிரிவாக வாழ்ந்தனர். இதனால் பௌத்த சங்கத்தில் முதற்பிளவு ஏற்பட்டது. இவனது காலத்தில் நாட்டில் மிகக் கொடூரமான உணவுப்பஞ்சம் நிலவியது. இதனால் மக்களும், மதகுருமார்களும் பல்வேறு இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசேனன் மன்னன் (கி. பி. 276-303)

அநுராதபுரகால மன்னருள் மகாசேனன் குறிப்பிடத்தக்கவனு வான். அநுராதபுரத்தில் விளங்கிய முப்பெரும் விகாரைகளில் ஒன்றுன ஜெதவனுராம விகாரையைக் கட்டியதால் சமயத் துறையில் அவன் புகழ் நிலைபெற்றுள்ளது. மகாயான பௌத்தத் துக்கு முதன் முதல் அங்கீகாரமளித்து, அதனைத் தழுவி, அதை ஆதரித்தமையால் வரலாற்றில் அவன் புகழ் பெற்றுள்ளான். மகா விகாரைக் கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு அங்கு பெறப் பட்ட பொருட்கள் அபயகிரிக் கட்டிடங்களை அழகுபடுத்தப்பயன் படுத்தப்பட்டன. லோகபாசாத என்ற கட்டிடம் இடிக்கப்பட்டது. இவனது ஆட்சிக் காலத்தில் அபயகிரி விகாரையும், மகாயான பௌத்தமும் இலங்கையில் மேனிலையடைந்தன.

மகாசேனனுக்கு நிலையான புகழையும், பெருமையையும் தருவன அவனது பொருளாதாரப் பணிகளே இவன் நாட்டை வளமாக்க பதினுறு குளங்களையும், எலஹறரக்கால்வாயையும் கட்டினுன். இவற்றுள் மிகவும் பிரசித்தி பெற்றது மின்னேரியாக் குளமாகும். கவுடுலுவாவி, ஹருலுவாவி, மகாகணதாரவ முதலான குளங்களும் இவனுல் கட்டப்பட்டவையாகும். இவனுடைய ஆட்சிக்காலத்தில் பயிர்செய்கையில் மிகுந்த முன்னேற்றத்தையும், பொருளாதாரத் துறையில் சுபீட்சத்தையும் நாட்டு மக்கள் எய்தியிருந்தனர். இத னுல் இவன் ''மின்னேரியாத் தெய்வம்'' என மக்களால் வழிபடப் பட்டுள்ளான். இவ்வாறு மகாசேனன் 27 ஆண்டுகால ஆட்சியில் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தி வரலாற்றில் மங்காப்புகழ் பெற்றுள்ளான்.

# தாதுசேன மன்னன் (கி. பி. 459-477)

இலம்பகர்ண வம்சத்தவரின் ஆட்சி, மகாநாமனின் ஆட்சியுடன் கி. பி. 432 இல் முடிவுற்றது. பின்னர் அரசவம்சத்தைச் சாராத மித்சென் என்பவன் அரசனுனதைத் தொடர்ந்து நாட்டில் குழப் பங்கள் தோன்றின. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தென்னிந்தி யாவில் இருந்து பாண்டியர் படையெடுத்து வந்து இலங்கையைக் கைப்பற்றி 27 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். மௌரிய வம்சத்தைச் சேர்ந்த தாது சேனன் கி. பி. 459 இல் பீதியன் என்ற தமிழ் மன்ன னைத் தோற்கடித்து அந்நியர் ஆட்சியிலிருந்து இலங்கையை மீட் டான். இதனுல் இலங்கையை அந்நியர் ஆட்சியிலிருந்து மீட்ட விடுதலைவீரர் வரிசையில் தாதுசேனனும் இடம்பெறுகின்றுன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்திய அநுராதபுரகால மன்னர்களில், நீர்ப்பாசனத்துறையில் சிறந்த பணியாற்றினுன். கால ஓயாவை மறித்து ''கலாவீவா'' என்ற பெருங் குளத்தைக் கட்டினுன். ஜயகங்கை என்ற கால்வாயை வெட்டி காலவீவாவையும், திசவீவாவையும் இணைத்தான். இவன் பாசனத்திற்காக 18 குளங்களைக் கட்டினுன்.

தலைநகரிலிருந்த முப்பெரும் விகாரைகளும் இவனது ஆதரவைப் பெற்று வளர்ச்சியடைந்தன. போதிமரத்துக்கு ''போதிகர'' என்ற கட்டிடத்தைக் கட்டினுன். 18 விகாரைகளையும், போதிசத்துவரின் சிலைகள் வைக்கப்பட்ட கோவில்களையும் கட்டினுன். இவனது ஆட்சிக் காலத்தில் சீனுவுக்கு ஒரு மதத்தூதுக்குழு அனுப்பப்பட்டது. இத்தகைய பலதரப்பட்ட பணிகளையும் மேற்கொண்ட இவனது முடிவு பரிதாபகரமானது. அரச குடும்பத்தைச் சாராத ஒரு பெண்ணிற்குப் பிறந்த அவனது மூத்த மகனுன காசியப்பனுல் அவனது ஆட்சி அபகரிக்கப்பட்டதோடு, சுரங்க அறையின் சுவரில் வைத்துக் கட்டிக் கொல்லப்பட்டான். இதனுல் அரசுரிமையை இழந்த இளவரசன் மொகல்லானன் இந்தியாவுக்கு ஓடினுன்.

## காசியப்ப மன்னன் (கி. பி. 477-495)

காசியப்பன் தனது தந்தையைக் கொன்று கி. பி. 477 இல் ஆட்சிக்கு வந்தான். சீகிரியாவே காசியப்பனுக்கு வரலாற்றுப் புகழைத் தேடித்தந்துள்ளது. மனிதர்களால் இலகுவில் ஏற முடியாத சீகிரியா மலையில் தனது அரண்மனையை அமைத்தான். இதன் அடித்தளத்தில் படுத்திருக்கும் சிங்கத்தின் பிரமாண்டமான ஓர் உருவத்தை அமைத்தான். பளிங்குச் சுவர்களுடன் கூடிய சபா மண்டபத்தைக் கட்டினுன்' சிகிரியாப் பூங்காவை நிறுவினுன். இக்குன்றின் மேற்குப்புறப் பாறைச் சுவரில் தீட்டப்பட்டுள்ள சுவரோவியங்கள் உலகப் புகழ் பெற்ற அஜந்தா ஓவியங்களை ஒத்தவை. குன்றையடுத்திருந்த உதிரிப் பாறைகளில் சிந்தையைக் கவரும் சிற்ப வடிவங்களைச் செதுக்குவித்தான். இவையனைத்தும் காசியப்பனின் பெருமையையும், புகழையும் பன்னெடுங்காலம் நிலைபெறச்செய்துள்ளன.

இசுருமுனியா விகாரையை நன்னிலைக்குக் கொண்டு வந்தான். சமய விழாக்களை நடாத்தியும், தானசாலைகளை நிறுவியும் சமயத்திற்குப் பல பணிகளைச் செய்தான். கி. பி. 495 இல் மொகல்லானன் இந்தியாவிலிருந்து படைகளுடன் வந்து காசியப்பனிடமிருந்து ஆட்சியைப் பெற்றுக்கொண்டான். காசியப்பன் தன் வீரர்கள் தவருன அறிகுறியைக் கண்டு புறமுதுகிட்டதைத் தாங்காது தற்கொலை செய்து கொண்டான். இவனது சீகிரிய வண்ண ஓவியங்கள் இன்று ஓர் உலகப்பண்பாட்டுச் சொத்தாகப் பேணப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரகால விவசாயமும், வர்த்தகமும்

## விவசாயம்

இலங்கையில் குடியேறிய ஆரியர் அநுராதபுரகாலத் தொடக்கத்திலேயே இங்கு பயிர்ச்செய்கையைப் புகுத்தினர். இக்காலப் பகுதியில் பயிர்ச்செய்கையானது மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்தது. பயிர்ச்செய்கையின் அடிப்படையில் நாடு செழிப்புற்று அநுராதபுர காலத்தின் பெருமைக்கும், புகழுக்கும் வழிகோலியது. இலங்கையுணவு தமிழ் நாட்டுக்கும் பிறநாடுகளுக்கும் ஏற்றுமதியாகியது. பயிர்ச்செய்கை பிரதான தொழிலாக கிராம அடிப்படையில் நடைபெற்றதால் ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவுச் சமூகமாகக் காணப்பட்டது.

ஆரம்பகாலத்தில் குடியேறிய மக்கள் தாம் குடியேறிய பகுதிகளில் இருந்த காடுகளை அழித்து, அந்நிலங்களில் மழையின் உதவியுடன் பயிர் செய்தனர். இம்முறையிற் பயிர் செய்வதால் அதிக மழையை நம்பியிருக்க வேண்டியிருந்தது. இக்குறைபாட்டினை உணர்ந்த மக்கள் தமது அனுபவத்தைக்கொண்டு வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சும் முறையை மேற்கொண்டனர். நீர்ப்பாசன முறைகள் மேற்கொள்ளப் பட்டமையாலேயே அநுராதபுரகாலப் பயிர்ச் செய்கை நாட்டுக்குச் செல்வச்செழிப்பை அளித்தது. நெல்லே பிரதான விளைபொருளாக இருந்த போதிலும், அவரை, பருப்பு வகைகள் எள்ளு, கருப்பு, பருத்தி, பழவகைகள் போன்ற பயிர்களும் பயிரிடப்பட்டன. மலையகத்தில் வாசனைத்திரவியங்கள், இஞ்சி, மிளகு போன்ற பொருட்கள் பெறப்பட்டன. கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்தல் போன்றவையும் அக்காலத்தில் முக்கிய தொழில்களாக இருந்துள்ளது.

## நீர்ப்பாசனம்

இலங்கை வரலாற்றின் ஆரம்ப காலத்தில் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான குளங்களே காணப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த பட்சம் ஒரு சிறிய குளமாவது இருந்துள்ளது. நாட்டு மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு அவசியமான நீரை வழங்குவது தமது கடமை என்பதை புராதன மன்னர்கள் கருதினர். இதனால் ஏறக்குறைய எல்லா மன்னர்களும் குளங்கள், அணைகள், கால்வாய்கள் போன்றவற்றை அமைப்பதில் ஈடுபட்டனர். வரலாற்றுக் குறிப்புகளின்படி பண்டுகாபய மன்னனால் கட்டப்பட்ட அபயவாவியே இலங்கையின் மிகப் புராதன குளமாக விளங்குகின்றது. அநுராதபுர காலத்தின் முதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் பெரும்பாலும் சிறிய குளங்களே காணப்பட்டன. பெரிய குளங்கள் கட்டும் பழக்கம் வசப மன்னனின் காலத்திலேயே ஆரம்ப மாகியது. குளம் கட்டிய மன்னர்களையும், அவர்கள் கட்டிய குளங் களையும் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

| மன்னர்கள் | குளங்கள் |
|---|---|
| 1. பண்டுகாபயன் | அபயவாவி |
| 2. தேவநம்பியதீசன் | திசவாவி |
| 3. வாலகம்பாகு | நுவரவாவி |
| 4. வசபன் | எருவாவி |
| 5. மகாசேனன் | மின்னேரியா, கவுடுலுவாவி, உருளுவாவி |
| 6. தாதுசேனன் | காலவாவி, யோதவாவி, ஜயகங்கை கால்வாய் |
| 7. 2ஆம் மொகல்லானன் | நாச்சதுவவாவி, பதவியா |
| 8. 1ஆம் அக்கிரபோதி | குருந்தவாவி |
| 9. 2ஆம் அக்கிரபோதி | கந்தளாய், கிரித்தலே |

## வர்த்தகம்

இலங்கையின் நிலையமும், இலங்கையிற் பெறப்பட்ட வர்த்தகப் பொருட்களின் சிறப்புமே இலங்கை பிறநாட்டு வர்த்தகத்தில் இடம் பிடிக்கக் காரணமாகும். உரோம், கிரேக்கம், பாரசீகம், சீனு, இந்தியா போன்ற பிறநாடுகள் பல இலங்கையுடன் வர்த்தக ரீதி யாகத் தொடர்பு கொண்டிருந்தன. இவ்வர்த்தகத் தொடர்பினுல் இலங்கையின் பொருளாதாரம் சிறப்புற்றது மட்டுமன்றி, பிற நாட்டுப் பண்பாடுகள் இலங்கையிற் பரவவும் வழியுண்டாயிற்று. கி. பி. 1 ஆம் நூற்றுண்டிலிருந்து கிரேக்க, உரோம வர்த்தகர்கள் இலங்கைக்கு வந்து வர்த்தகம் செய்யலாயினர். கி. பி. 4ஆம் நூற் றுண்டிலும் இலங்கைத் தூதுக்குழு உரோம் சென்றது. இதனுல் இலங்கை - உரோம வர்த்தகம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இந்தியாவுடனுன வர்த்தகத் தொடர்புகள் ஆரியர்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுமுன்னரே இருந்துள்ளது. கி. பி. 1ஆம் 2ஆம் நூற்றுண்டுகளிலிருந்தே சீனு - இலங்கை வர்த்தகத் தொடர்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிவந்துள்ளன. இவ்வர்த்தகத் தொடர்புகள் 4ஆம் நூற்றாண்டளவில் மேலும் அதிகரித்தன. பிந்திய அநுராதபுர காலத்தில் பாரதேசத்திலிருந்தும் வர்த்தகர்கள் இலங்கை வந்தனர். 7ஆம் நூற்றாண்டிலிருந்து அராபியர் மேலைக்கடலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதிலிருந்து இலங்கைக்கும், மேற்கு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் அவர்கள் கைக்கு மாறியது. 10ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் முழுவதையும் அராபிய வர்த்தகர்கள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இலங்கையின் பிறநாட்டு வர்த்தகத் துறைமுகங்கள்யாவும் வட இலங்கையிலேயே அமைந்தன. இவற்றில் தனியிடத்தைப் பெற்றது மகா தீர்த்தமாகும். இதனோடு ஊர்காவற்றுறை (ஊராத்தோட்ட) திருகோணமலை (கோகண்ண), தம்பபண்ணி, மகண, உறுவெல போன்ற துறைமுகங்களும் அக்காலத்தில் சிறப்புடன் விளங்கின. இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களாக இரத்தினக்கற்கள், முத்துக்கள், சங்குகள், யானைத்தந்தங்கள், யானைகள், ஆமையோடுகள் ஆகியன இருந்துள்ளன. இவற்றில் இரத்தினக்கற்களுக்கே பிறநாடுகளில் பெரும் கிராக்கி இருந்தது. இதன் மதிப்பினாலேயே இலங்கை இரத்தினத்துவீபம் என அழைக்கப்பட்டது. இப்பொருட்களுக்கு ஈடாக இலங்கை பொன், வெள்ளி, பவளம், செம்பு, கண்ணாடி மட்பாண்டங்கள், குதிரைகள், பட்டுத்துணிகள் முதலானவற்றை இறக்குமதி செய்தது. இக்காலத்தில் பல நாட்டவர்கள் இலங்கையுடன் வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தபோதும், இதனால் இலங்கையின் அரசியற் சுதந்திரம் பாதிக்கப்படாது பொருளாதார, பண்பாட்டு நிலைமைகள் முன்னேற்றமடைந்தன.

# தென் இந்தியச் செல்வாக்கும் அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும்

## பல்லவப் பேரரசின் செல்வாக்கு

2ஆம் காசியப்பனின் (கி.பி. 650 - 659) மகனான மானவர்மன் அரசுரிமை பற்றி நடைபெற்ற சச்சரவில் தனக்குப் போதிய ஆதரவின்மை கண்டு இந்தியாவுக்குச் சென்று பல்லவப் பேரரசனான 1ஆம் நரசிம்மவர்மன் சேனையில் சேர்ந்து கொண்டான். இவனது திறமை கண்டு மன்னன் தனது படைப்பிரிவு ஒன்றிற்கு தளபதியாக நியமித்தான். சாளுக்கியருடன் நரசிம்மவர்மன் நடாத்திய போரில் மானவர்மன் தனது திறமையையும், உறுதியையும் வெளிக்காட்டினான். தனது போர்ச்சேவையில் நீண்ட காலம் உண்மையுடன் உழைத்த சிங்கள இளவரசனான மானவர்மனுக்கு, இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுரிமையைப் பெற்றுக்கொடுக்க பல்லவ அரசன் முடிவு செய்தான். பெரும்படையொன்றினை மானவர்மனுடன் அனுப்பி வைத்தான். கி.பி. 664 இல் மகாதீர்த்தத்தில் வந்திறங்கிய பல்லவப் படை அநுராதபுரத்தைக் கைப்பற்றியது. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் நரசிம்மவர்மன் நோய்வாய்ப்பட்ட செய்தி வந்தமையால் பல்லவப் படை தம்நாடு திரும்பியது. சிறியபடையுடன் தங்கியிருந்த மானவர்மன் 2ஆம் தாடோபதிசனின் பெரும்படையுடன் மோத முடியாது மீண்டும் இந்தியா சென்முன்.

கி.பி. 684 இல் 2ஆம் நரசிம்மவர்மன் காலத்தில் பெரும்படையுடன் வந்த மானவர்மன் ஆட்சியைக் கைப்பற்றினுன். சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனது காலத்தில் உண்டான பல்லவச் செல்வாக்கு, இவனது புதல்வர்களதும், பின்னேர்களதும் ஆட்சிக்காலங்களிலும் நீடித்தது. இக்காலத்தில் தமிழ் நாட்டு வர்த்தகக் குழுக்கள் வர்த்தகத்தை நடாத்தி வந்தன. சில இடங்களில் வர்த்தகர் குடியிருப்புக்களும் நிறுவப்பட்டன. தமிழ் நாட்டில் சைவசமயம் நன்னிலை பெற்றிருந்தமையால், வடஇலங்கையிலும் அதன் தாக்கம் ஏற்பட்டது. மாந்தையில் திருக்கேதீஸ்வரமும் திருகோணமலையில் திருக்கோணேஸ்வரமும் புனித தலங்களாகப் பேணப்பட்டன. பல்லவகட்டிடச்சிறப்புப் பிரதிபலிப்புக்களை நாலந்தாவிலுள்ள "கெடிகே" கட்டிடமும், இசுருமுனிய சிற்பங்களும் எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

## பாண்டியப் பேரரசின் செல்வாக்கு

பாண்டியப்பேரரசு 8ஆம், 9ஆம் நூற்றுண்டுகளில் இராசசிங்கன், முதலாம் வரகுணன், ஸ்ரீ மாறஸ்ரீவல்லபன் போன்ற மன்னர்களின் காலத்தில் விரிவடைந்து வந்தது. இவ்விரிவாக்கற் கொள்கை தெற்கேயிருந்த இலங்கைத் தீவையும் பாதித்தது. 1ஆம் சேனன் (கி.பி 833 - 853) காலத்தில் 1ஆம் வரகுணபாண்டியன் இலங்கை மீது படையெடுத்தான். வரகுணனின் மகனுன ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் தலைமையில் ஒருபெரும் படை வடபகுதியில் வந்திறங்கியது. நாட்டின் பலபாகங்களிலும் இருந்த தமிழர் ஸ்ரீமாறனின் படையைச் சார்ந்து நிற்கலாயினர். பாண்டியப் படையை எதிர்க்கச் சென்ற சேனனின் படைகள் சிதறடிக்கப்பட்டன. இதனுல் சேனன் மலையகத்திற்குத் தப்பியோடினுன்.

அநுராதபுரம் பாண்டியர் வசமாகியது. விகாரைகளும், நகரமும் கொள்ளையடிக்கப்பட்டன. பின்னர் பாண்டியமன்னன் அனுப்பிய தூதுவர்களிடம் வேண்டிய வெகுமதிகளை அளித்து, 1ஆம் சேனன் பாண்டியருடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிய மன்னன் ஒப்பந்தப்படி தான் பெற்ற அரசதிரவியங்களுடனும், கொள்ளைப்பொருட்களுடனும் நாடு திரும்பினுன். பின்னர் 2ஆம் சேனன் (கி. பி. 853 - 887) காலத்தில் ஸ்ரீமாறஸ்ரீவல்லபவனின் மகனுன 2ஆம் வரகுணன் தந்தைக்கெதிராகக் கலகஞ் செய்து புகலிடம் தேடி இலங்கை வந்தான்.

2ஆம் வரகுணனை ஆதரித்து அவனுக்கு உதவ 2ஆம் சேனன் முன்வந்தான். இதன் மூலம் தன் குடும்பமும், நாடும் முன்னர் அடைந்த அவமானத்தைத் துடைக்கலாமென எண்ணினுன் சேனன் பெரும்படை திரட்டி குட்டகன் என்ற தளபதியின் தலைமையில் வரகுணனுடன் பாண்டி நாட்டிற்கு அனுப்பினுன். பாண்டியன் பல்லவப்படையுடன் போர் செய்து தோல்வியுற்றிருந்த சந்தர்ப்பத்தில், நாட்டினுள் நுழைந்த சிங்களப்படை தலைநகரை முற்றுகையிட்டு வெற்றி கொண்டது. 2ஆம் வரகுணன் அரசனுக்கப் பட்டான். முன்னர் இலங்கையிலிருந்து அபகரித்துச் செல்லப்பட்ட திரவியங்களை மீட்டதோடு, பாண்டியரின் அரசதிரவியங்களையும் பெற்ற சிங்களப்படை நாடு திரும்பியது.

## சோழப்பேரரசின் செல்வாக்கு

சங்ககாலத்தில் தமிழ்நாட்டில் சுதந்திரத்துடன் திகழ்ந்த சோழ அரசு களப்பிரர் ஆட்சியில் தன் சுதந்திரத்தை முற்ருக இழந்திருந்தது. இவ்வாறு அறுநூற்ருண்டுகளுக்கு மேலாக சோழர் அரசியல் முக்கியத்துவம் இழந்திருந்தனர். ஆனல் 9ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வியக்கத்தக்க வகையில் குறுகிய காலத்தில் ஒருபேரரசை அமைத்துக் கொண்டனர். தென்இந்தியா முழுவதையும் உள்ளடக்கிய சோழப்பேரரசு இராஜராஜன், இராஜேந்திரன் மன்னர் காலத்தில் இந்தியாவுக்கு வெளியேயும் விரிவு பெற்றது. இராஜராஜனின் மகனுன இராஜேந்திரனுல் கி. பி. 1017 இல் இலங்கைமீது படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக இலங்கை முழுவதும் சோழராட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. இலங்கை மன்னன் 5ஆம் மகிந்தன் சிறை பிடிக்கப்பட்டான். பாண்டிய மன்னனுல் முன்னர் இலங்கையில் விடப்பட்ட மணிமுடியையும், பிறஅரச சின்னங்களையும் மீளப் பெற்றுக்கொண்டனர்.

## அநுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சி

நான்காம் மகிந்தனுக்குப் பின் இலங்கையின் அரசியலில் குழப்ப நிலைமைகள் தோன்றின. கலிங்க இராணிக்குப் பிறந்த அவன் மகனுன 5ஆம் சேனன் அரசைப் பெற்று பத்தாண்டுகளில் இறந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் குழப்பநிலைகளின் மத்தியில் 5ஆம் மகிந்தன் மன்னனானான். இவன் அநுராதபுரத்திற்குச் சென்று முடிசூடி கொண்ட போதும், அங்கு அவனுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. சேனாதிபதி சேனனால் கொண்டுவரப்பட்ட அந்நியரும், கூலிப்படையினரும் (சேரர், கன்னடர்) கட்டுக்கடங்காது குடிமக்களைத் துன்புறுத்தினர் இந்நிலைமையைப் பயன்படுத்தி குடிமக்கள் வரிகளைக் கொடாது விட்டனர். அவர்களை அடக்கித் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முடியாத நிலையில் மகிந்தன் இருந்தான். நீண்டகாலம் வேதனம் வழங்கப்படாததால் படையினர் கலகம் செய்து, அரண்மனையை முற்றுகையிட்டு வேதனத்தைப் பெற முயன்றனர். இதனால் மகிந்தன் சுரங்கப்பாதை வழியாக உறுகுணைக்குத் தப்பி ஓடினான்.

தலைநகர் கைவிடப்பட சிங்களப்படையினரும், அந்நிய கூலிப் படையினரும் தம் மனம் போனவாறு கொள்ளையிலீடுபட்டனர். இவ்வாறான அவலநிலையில் நாடு இருந்தபோதே சோழப்படையெடுப்பு நடைபெற்றது. கி. பி. 993 இல் இராஜராஜசோழன் படையெடுத்து வந்து இராசரட்டையைக் கைப்பற்றினான். இராசரட்டை "மும்முடிச் சோழமண்டலம்" என்ற பெயருடன் சோழப்பேரரசின் ஒரு மாகாணமாகச் சேர்க்கப்பட்டது. அநுராத புரநகரம் அழிக்கப்பட்டு அங்குள்ள விகாரைகளில் இருந்த செல்வம் சூறையாடப்பட்டது. தலைநகரம் பொலன்னறுவைக்கு மாற்றப்பட்டு 'ஜனநாதபுரம்" என்ற பெயர் சூட்டப்பட்டது.

பொலன்னறுவையைச் சோழர் தலைநகராக்கியமைக்கு அவர்கள் முழு இலங்கையையும் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டதே காரணமாகும். இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆளும் இராஜராஜனின் எண்ணம் அவன் மகன் இராஜேந்திரனால் நிறைவேற்றப்பட்டது. கி. பி. 1017இல் இலங்கை முழுவதும் சோழர் ஆட்சியின் கீழ் வந்தது. சிறை பிடிக்கப்பட்டு இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட மகிந்தன் அங்கேயே இறந்தான். பொலன்னறுவைக்கு இராசதானி மாற்றப்பட்டதுடன் அநுராதபுரகாலம் முடிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் ஏனைய வெளியீடுகள்

- சமூகக்கல்வி (ஆண்டு 7) விலை: 11 - 00
- சமூகக்கல்வி (ஆண்டு 9) விலை: 9 - 00
- சமூகக்கல்வி (ஆண்டு 10) விலை: 11 - 50
- சமூகக்கல்வி (ஆண்டு 11) விலை: 15 - 00
- வரலாறு (ஆண்டு 6) விலை: 12 - 50
- வரலாறு (ஆண்டு 11) விலை: 17 -50
- வரலாறு (ஆண்டு 10) அச்சில்
- சமூகக்கல்வி
  மெற்றிக் தேசப்படம் ஓர் அறிமுகம் அச்சில்
  (ஆண்டு 9, 10, 11)

*விற்பனையாளர்*

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

*4, பஸ் நிலையம்,*
*யாழ்ப்பாணம்.*

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

*234, கே. கே. எஸ். வீதி*
*யாழ்ப்பாணம்.*

*சாந்தி அச்சகம் யாழ்ப்பாணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org